உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி ௨௩.] ரக்தாக்ஷி ஹூ மாசிமீ [பகுதி ௪.

Vol. XXIII. February-March-1925. No. 4.

மதங்க சூளாமணி.

ஒழிபியல்.

[௮௬-ம் பக்கத் தொடர்ச்சி.]

௩. மூன்றுமதிகாரம், சாதி (நாடகவகை) சேதம் என்னும் இரண்டுறுப் புணர்த்துதலுதலிற்று. இருபதுமுதல் இருபத்தாறுவரையுமுள்ள சூத்திரங்கள் சேதமுணர்த்துவன. ஒழிந்த சூத்திரங்கள் சாதியுணர்த்துவன.

1. முதன்மைபற்றியும், எல்லாச்சுவைகளையுந் தழுவி நிறைந்த இலக்கணத்ததாகிய தலைமைபற்றியும் நாடகத்தை முதலிற் கூறுவாம்.

2. சூத்திரதாரன் ஆரம்பத்திற் செய்யவேண்டிய கருமங்களை (பூர்வரங்கத்தை)ச் செய்துமுடித்துப்போயினபின்னர்க் கூத்தனொருவன் அவ்வண்ணமே (சூத்திரதாரனைப்போலவே) உட்புகுந்து நாடகத்துக்குத் தோற்றுவாய்கூறுவான். இவன் ஸ்தாபகனெனப்படுவான். [பூர்வரங்கம் என்பன: மாயோனை வாழ்த்துதலும், வருணப்பூதரை வாழ்த்துதலும் இன்னன பிறவும்.]

3-4. தேவர், மானிடர் நாடகபாத்திரராயின் * அவ்வவ்வுருவத்தோடும், இருசாராருங் கலந்துவரும் (மிச்சிர) சரிதையெனின் ஒருசாரார் உருவத்தோடும் ஸ்தாபகன் தோன்றிப் பொருள், பீஜம்,

முகம் என்னும் இவற்றினுள் ஒன்றினைக் குறித்தோ, நாடகபாத்திரருள் ஒருவரைக் குறிப்பாலுணர்த்தியோ, இன்னிசையான கீதம் பாடி அரங்கத்தை (அரங்கம்: நாடகம் பார்ப்போரைக் குறிக்கும். மகிழ்வித்த பின், பாரதிவிருத்தியினால் அறுவகைப் பெரும்பொழுது (இருது: கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்) களுள் ஒன்றினை வருணிப்பான். [ஸ்தாபகன் ஆரம்பத்திற் பாடுகிற பாட்டு நாந்தியெனப் படும்; இதனை அவையடக்கியல் என்பது தமிழ்வழக்கு. ஸ்தாபகன் தமிழ்வழக்கிற் கட்டியக்காரனை நிகர்ப்பான்.]

5. செம்மொழி பெரும்பான்மையும் மேவப்பெற்று நடர் பொருளாக (நடாஸ்ரயம்) வருஞ் சொல்வழக்கு (வாக்வியாபாரம்) பாரதி விருத்தி யெனப்படும். இது பிரரோசனை, வீதி, பிரகசனம், ஆமுகம் என நால்வகைப்படும். [நால்வகைக்கு முரிய இலக்கணத்தை நுணுக நோக்குவார்க்குப் பாரதிவிருத்தியின் ஆட்சியுங் குணமும் நன்கு புலப் படுவனவாம். சூத்திரத்தில் "ஸம்ஸ்க்ருதம்" என நின்ற பதத்தைப் பொதுவியல்புநோக்கிச் "செம்மொழி" யென மொழிபெயர்த்தாம். தமிழ் நாடகமரபுக்குச் "செம்மொழி" செந்தமிழாகும்.]

6. சபையோரின் உள்ளத்தில் மேல்வருவனவற்றைப் பார்ப்பதற்கு அவாவுண்டாகும்படி எடுத்துக்கொண்டபொருளைப் புகழ்ந்து கூறுதல் பிரரோசனை யெனப்படும்.

7. வீதி 62-ம் 63-ம் சூத்திரங்களுள்ளும், பிரகசனம் 49- 50-ம் சூத்திரங்களுள்ளுங் கூறப்படுவன. வீதியின் உட்பிரிவுகள் ஆமுகத்தின் உட்பிரிவுகளை நிகர்த்தனவாதலின் ஒன்றின்பின்னொன்றாக இவற்றின் இலக்கணத்தை ஈண்டுத் தருவாம்; முதலில் ஆமுகத்தை யெடுத்துக்கொள்வாம்.

8-10. சூத்திரதாரன் "நடி"யையோ, "மார்ஷ"னையோ, "விதூஷக"னையோ விளித்துத் தனதுகருகம் ஏதோ பேசுவதுபோலச் சொல்வன்மையினால் நாடகத்துப் பொருளைக் குறிப்பாகவுணர்த்துவது ஆமுகமாகும். இது பிரஸ்தாவனை யெனவும்படும். சூத்திரதாரனது சொல்லோ, குறிப்போ காரணமாக நாடகபாத்திரருள் ஒருவன் தோற்றுவது "கதோற்காதம்; "காலவியல்பினை" வருணித்துரைத்தல் கேட்டு

ஆங்குக் கூறப்பட்ட குறிப்புக் கியைய நாடகபாத்திரன் தோற்றுவது பிரவிருத்தகம்; சூத்திரதாரன் ஒரு நாடகபாத்திரனைக் குறிப்பிட்டு, "இதோவருகின்றான்" என அவன் தோற்றுவது பிரயோகாதிசயம். இவைமூன்றும் பிரஸ்தாவனையின்வகைகள். வீதியின் உட்புரிவுகள் பதின்மூன்று.

11-18. கூற்றும் மாற்றுமாக இருவர் கலந்து வார்த்தையாடுவது உற்காத்யகம்; கூடார்த்தமாகிய மறைபொருண்மொழிகளை யொன்றின்பின்னொன்றாகத் தொடுத்துக்கூறுவதும் இதுவே; தொடர்பில்லா இரு நிகழ்ச்சிகள் ஒரேகாலத்தில் நிகழ ஒன்றினைப்பற்றி யுரையாடினோன் அதனைவிடுத்து மற்றதனைப்பற்றி யுரையாடுதல் அவலகிதம்; சபையார் நகைக்கும்படி இருவர் (ஒருவர் மற்றவரை) பொய்ம்மொழிகூறிப் புகழ்ந்துரைத்தல் பிரபஞ்சம்; மூவர்நின்று வார்த்தையாடும்போது சிலேடைமொழியின் உபயோகத்தினால் ஒருவர் மற்றிருவருக்கும் இருவேறு கருத்துப்படும்படி யுரைத்தல் திரிகடம்; நட்புமொழிபோற்றோன்றும் வஞ்சனைமொழியினால் ஒருவனைத் தீயநெறியிற் செலுத்துதல் சலம்; வினாவெதிர்மறுத்தல் வாக்கேலி; ஒருவ ரொருவரை வெல்லும்படியாகச் செய்கின்ற வாக்குவாதம் அதிபலம்; நடந்துகொண்டிருக்கிற சம்பாஷணையோடு ஒருவகைத் தொடர்புடைய வேற்றுப்பொருளொன்றினைச் சட்டெனக்கூறுவது கண்டம்; சுவைபயக்கச் சொல்லிய சொற்களுக்கு மற்றொருவகையாகவும பொருளுரைத்துக்காட்டுதல் அவசியந்திதம; நகைபயக்கும் மறைபொருண்மொழி நாளிகை; தொடர்பற்றவாக்கியங்களால் உரையாடுவது அசற்பிரலாபம; பிறன்பொருட்டு நகையும் அவாவும் விளைக்க வுரைப்பது வியாகாரம். குணங்களைக் குற்றங்களாகவும் குற்றங்களைக் குணங்களாகவுங் கொள்ளுதல் மிருதவம; இவை வீதியின் உட்பிரிவுகள்.

19. மேற்காட்டியவற்றுள் ஒன்றின்மூலமாகச் சூத்திரதாரன் நாடகக்கருத்து நாடகபாத்திரம் என்னும் இவற்றைக் குறிப்பிட்டுப் பிரஸ்தாவனைமுடிவிற் போய்விட நாடகம் ஆரம்பமாகும்.

20-21. சகல நற்குணங்களும் நிறைந்த தீரோதாத்தனாய்க் கீர்த்திமானாய்க் கீர்த்தியை விரும்பினவனாய், வல்லமைசாலியாய், வேதங்

கள்மூன்றையுங் காப்பாற்றுபவனும், உலகாள்பவனும், தேவர்வழியிலோ ரிஷிகள்வழியிலோ உதித்தவனு யுள்ள தலைவன் றோன்றுகிற நாடகத்தில் அவனது நிகழ்ச்சிகளுள், பெருங்கீர்த்திவாய்ந்த நிகழ்ச்சியொன்றினையே தலைமைப்பொருள் (ஆதிகாரிகம்) ஆகக் கொள்ளுதல்வேண்டும்.

22. தலைவனது தலைமைக்குணத்தோடு மாறுபட்ட நிகழ்ச்சிக ளிருப்பின் அவற்றைத் தவிர்த்துவிடவேண்டும்; அன்றேல் ஒருவகை யாக வேறுபடுத்தியுரைத்தல்வேண்டும்.

23. சரித்திரநிகழ்ச்சியின் தொடக்கத்தையும் முடிவையும் நிச்ச யித்தபின்பு அதனை முறையறிந்து ஐந்துசந்திகளாகப் பகுத்துக் கொள்ளல் வேண்டும்.

24. பின்னர் அறுபத்துநான்குசந்தியுட்பிரிவுகளாகப் பகுத்துக் கொள்ளலாம். கிளைக்கதை (பதாகை)யுளதாயின் அதனையும் அநுசந்தி களாகப் பகுத்துக்கொள்ளவேண்டும். அநுசந்தியின் றொகை ஐந்திற் குறையவிருத்தல்வேண்டும். வழிநிகழ்ச்சி (பிரகரீ)யைச் சந்தி வகுத்தல் கூடாது.

25. ஏற்புடைத்தாயின் முதலங்கத்துக்கு முன்னே ஒரு முன்னுரைக்காட்சியை (விஷ்கம்பத்தை) வைக்கலாம். நாடகக்கட்டுரை யைச் சீர்ப்படுத்துப்போது சிற்சிலபாகங்கள் சுவைபயவாநீர்மைய வெனினும் பின்வரும் நிகழ்ச்சிகளை விளங்கப்படுத்துவதற்கு இன்றி யமையாதனவெனக் காணப்படின் அவற்றைத் தொகுத்து ஒரு முன் னுரைக்காட்சியாக அமைக்கவேண்டும்.

26. ஆரம்பந் தொட்டு அனைத்துநிகழ்ச்சிகளும் சுவைதரும் நீர்மையவாயின முன்னுரைக்காட்சியை யொழித்து முதலங்கத்தி னுள்ளே ஆமுகத்திற் கூறப்பட்ட குறிப்புக்கள் தோன்றுமாறு அமைத் துக்கொள்ளுதல்வேண்டும்.

27. அங்கமானது விரிநிலை (விந்து) செறிந்ததுவாய்ப் பலவாய கொள்கைகளையுஞ் சுவைகளையுந் தன்னுள் ளடக்கிக் கதாநாயகனுடைய நிகழ்ச்சிகளைக் காட்டுவது. [33-ம் 34-ம் சூத்திரங்களையும் நோக்குக.]

28. அங்கத்தினுட் டலைமைபற்றியசுவைக்கு ஆதாரமாகச் சுவைப்பொருள் குறிப்பு என்னும் இவற்றையும் சுவைநிலையவிநயம் வழிநிலையவிநயங்களையும் ஆராய்ந்தமைக்கவேண்டும்.

[இவற்றின் இலக்கணங்களை மேல்வரும் அதிகாரத்தினுட் காண்க.]

29. சுவையைப் பெரிதும் நோக்கி நாடகக்கட்டுரையினது தொடர்பினைக் கண்டப்படுத்துவதும், நிகழ்ச்சித்தொடர்புக்குரியவிஷயங் களைப் பெருகத்தருவதனாற் சுவையைக்குறைவுபடுத்துவதும் நன்றல்ல.

30. வீரச்சுவையையோ இன்பச்சுவையையோ நாடகத்துக்குத் தலைமைபற்றிய சுவையாகக் கொள்ளவேண்டும். ஏனைய சுவைகள் தலைமைபற்றியசுவைக்குச் சார்பாகநிற்றல்வேண்டும். மருட்கைச்சுவை இறுதியிலமாத்திரம் வருதல்வேண்டும.

31-32. நெடும்பயணம, கொலை, போர், அரசியலுக்கெதிராகிய கலகம், நாட்டை முற்றுகையிடுதல், உண்ணல், நீராடல, காமக்கலவி, எண்ணெயிடல், உடையணிதல் என்பன இவற்றையும் இவைபோல்வன வற்றையும் அரங்கததிற் பிரத்தியக்ஷமாகக்காட்டுதல் கூடாது. தலைவனது மரணத்தைக் காட்டுதல் கூடாது; இன்றியமையாதுவரிற் றவிர்த்த லியலாது.

33. ஒரேநாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளாய் ஒரேமுடிபுகருதினவாய்த் தலைவனையும் மூவர் நால்வர் நாடகபாத்திரர்களையும் உடையனவாய், முடிவில் அனைவரும போய்விடும நீர்மையவாய் அமைந்த நிகழ்ச்சிகளையே ஓரங்கமாகத் தொகுத்தல்வேண்டும.

34. விரிநிலை, பீஜம், வழிநிலைக்குறிப்பு (பதாகாஸ்தாநாகம்) என்னும் இவற்றையும் முன்னுரைக்காட்சியையும் ஆராய்ந்து அங்கங்களைச் செவ்விதி னமைக்கவேண்டும். நாடகததில் ஐந்து அங்கம் வருதல் வேண்டும்; மகாநாடகத்திற் பத்து அங்கம் வருதல்வேண்டும்.

35-38. [இனிப் பிரகரணத்தின் இலக்கணம் கூறுகின்றார்] பிரகரணத்தின்கதை கவியினாற் கற்பிக்கப்பட்டகதையாயிருத்தல் வேண்டும். நிகழ்ச்சி பூவுலகததில் நடக்கவேண்டும். தலைவன் அமாத்

தியன் (மந்திரி), விப்பிரன், வணிகன் என்னும் வகையில் ஒருவனுந் தீரசாந்தனும், அபாயமற்றவனுந் தருமார்த்தகாமம் மூன்றினையும் கருதியபொருளாகக்கொண்டவனும் வருதல்வேண்டும். சந்தி, விஷ்கம்பம், சுவை யென்னு மிவற்றை நாடகத்துக் கொண்டவாறு கொள்க. தலைமகள் தலைமகனது மனைவியாகிய குலமகளாகவாவது விலைமகளாகவாவது இருக்கலாம். குலமகள் மனையில் இருத்தல்வேண்டும். விலைமகள் புறத்தேயிருக்கவேண்டும். குலமகள் தலைவியாயின் சுத்தமெனவும், விலைமகள் தலைவியாயின விகிர்தமெனவும், இருவருமவரின் சங்கீர்ணமெனவும் பிரகரணம் மூவகைப்படும். சங்கீர்ணப் பிரகரணத்தில் தூர்த்தர்பலர் தோற்றுவர்.

39-43. [நாடிகையினிலக்கணம்.] நாட்டியவகை பலவற்றின் கலப்பாக நடக்கின்ற நாடிகையின் இலக்கணத்தை யாராய்வாம். பொருள் பிரகரணத்துக்குக் கூறப்பட்ட பொருளாகும். தலைவன் தீரலலித வகையைச் சேர்ந்த கீர்த்திமானாகிய அரசன். சுவை உவகைச்சுவை. நாடிகைச்சரிதை பெண்கள்பலர் வரப்பெற்று நான்கங்கங்களால் முடியுமெனப் பிறர்கூறினரெனினும் இரண்டு மூன்று அங்கங்களால் முடிவதுமுண்டு. தலைவனுக்கு நாயகிமார் பலரெனின், அவருள் வயதின்மூத்தாள் பட்டத்தரசியாயிருத்தல்வேண்டும். தலைவன அவள்விருப்பத்திற்கிணையவே பிறர்பாற்செல்லுதல்வேண்டும். நாடகத்தலைவி தலைவனைக் கண்டுங் கேட்டும் கருதிய காரணத்தினால் அவன்மேற் காதல்கொண்டவளாயிருத்தல்வேண்டும். தலைவன பட்டத்தரசிக்கு அஞ்சிநடக்குமியல்பு தோற்றவேண்டும். நாடிகை நான்கங்கங்களால் நடக்கும்பொழுது, அங்கங்கள் நான்கும் கைசிகிவிருத்தியின்வகை நான்கினையும் முறையே பெற்றுவருவன. [தமிழ்வழக்கிலுள்ள விலாசங்கள் இவ்வகைய]

44-46. [பாணம் என்னும் நாட்டியவகையினிலக்கணம்.] பாண்டித்தியமுடையோனும் நிபுணனுமாகிய விடனொருவன தோன்றித் தன்னுடைய அநுபவத்திலோ, பிறருடைய அநுபவத்திலோ, நடந்ததாக ஒரு தூர்த்தசரிதத்தை யெடுத்துச் சொல்வது பாணத்துக்குரிய பொருளாகும். இச்சரிதம் கவியினாற் கற்பிக்கப்பட்டதாகி ஓரங்கத்தில் முடியவேண்டும். விடன் ஒருவனைத்தவிரப் பிறரொருவருந் தோற்றுதல்

கூடாது. பிறர் தோற்றுரெனினுந் தோற்றிநிற்பதுபோலக் கற்பித்து ஆகாயபாஷிதமாக வினவையும் விடையையுந் தானே கூறி விடன் சம்பாஷிப்பது மாபாரும். அழகையும் ஆற்றலையும் வருணித்துக் கூறும் மார்க்கத்தாற் பாணமானது இன்பச்சுவையும் வீரச்சுவையும் நிரம்பியதாதல்வேண்டும். பாணத்தில் முகம் உபசங்கிருதி (துய்த்தல்) ஆகிய இரண்டுசந்திகளும் பத்துவகை இலாசியாங்கமும் வருவன.

47-48. இலாசியாங்கம் பத்தாவன:—

𑌗𑍇𑌯𑌪𑌦𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑌾𑌠𑍍𑌯𑌮𑌾𑌸𑍀𑌨𑌪𑍁𑌷𑍍𑌪𑌗𑌣𑍍𑌡𑌿𑌕𑌾
𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑍇𑌦𑌕𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌢𑌂 𑌚 𑌸𑍈𑌨𑍍𑌧𑌵𑌾𑌖𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌿𑌮𑍂𑌢𑌕𑌮𑍍
𑌉𑌤𑍍𑌤𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌉𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍇𑌵 𑌚
𑌲𑌾𑌸𑍍𑌯𑍇 𑌦𑌶𑌵𑌿𑌧𑌂 𑌹𑍍𑌯𑍇𑌤𑌦𑌙𑍍𑌗𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍

கேயபதம், ஸ்திதபாட்டியம், ஆசீனபாட்டியம், புஷ்பகண்டிகை, பிரச்சேதகம், திரிகூடம், சைந்தவம், துவிகூடம், உத்தமோத்தமகம், உக்தப்பிரதியுக்தம் என்பன. [இவற்றின் இலக்கணத்தை ஆசிரியர் கூறவில்லை. பாரதீயநாட்டியசாஸ்திரம் முதலிய முடிந்தநூலிற் கண்டு கொள்க என உரையாசிரியர் கூறிச்செல்வார்.]

49-50. [பிரகசனம் என்னும் நாட்டியவகையினிலக்கணம்.] பலதிறத்தாலும் பாணத்தையொத்த பிரகசனம் சுத்தம், விகிர்தம், சங்கீர்ணம் என மூவகைப்படும். சுத்தப்பிரகசனத்திற் பாசண்டர், விப்பிரர், சேடன், சேடி யென் றின்னோர் தோற்றிப் பொருத்தமான வேஷமும் பாஷையுந் தோன்ற நகையைவிளைக்கும் நகைக்குறிப்புமொழி களைக் கூறி நடிப்பர். காமுகராதியோர் தோற்றிக் காமக்குறிப்புத் தோன்றநடிப்பது விகிர்தப்பிரகசனம். தூர்த்தர் பலர்தோற்ற அறுவகை நகைக்குறிப்பும் வீதியினிலக்கணமும் பெற்று வருவது சங்கீர்ணப் பிரகசனம்; [பாரதிவிருத்தியின்வகைகளாகிய பிரரோசனை, வீதி, பிரகசனம், ஆமுகம் என்னும் நான்கினது இலக்கணமுங் கூறினும். பாரதிவிருத்தியென அடியார்க்குநல்லார்கூறிய பதினொராடலும் இவற் றினையொத்தும் ஒவ்வாதும் நிற்கின்ற மற்றொருவகையாதல் காண்க. அவையடக்கியலுக்கும் நாடகக் கட்டுரையின்றொடக்கத்துக்கு மிடையிற் பாரதிவிருத்தியின்வகையொன்று தோற்றுவது மாபென முன்னர்க்

காட்டினும். மாயோன்வாழ்த்தும், வருணப்பூதர்வாழ்த்தும், திங்கள் வாழ்த்தும், அவையடக்கியலு மாயினபின்னர்ப் பதினோராடலினுள் ஒன்றையோ பலவற்றையோ அரங்கிற் காட்டியதன்பின்னர் நாடகக் கட்டுரையைத் தொடங்குவது தமிழ்நாடகவழக்கு என எண்ண இடமுண்டு. பாரநியரங்கத்திலாடிய கொடுகொட்டி முதலிய பாரதிவிருத்தி தெய்வவிருத்தியென்னுங் குறியீட்டுக் குரியன இவைபோன்றன பிறவும் பாரதிவிருத்தியாயின].

51-53. [இடிமம் என்னும் நாடகவகையினிலக்கணம். திரிபுரதகனம் இதற்குச் சிறந்தபொருளென மேலோர்கூறுவர்.]

பொருள் பிரசித்தமாக யாவரும் அறிந்த பொருளாதல்வேண்டும். விருத்தி கைசிகியொழிந்தமூன்றும்; தலைவர் தீரோத்ததராய தேவர், கந்தருவர், இயக்கர், இராக்ஷசர், பூதர், பிரேதர், பைசாசர் என்றின்னோர்; சுவை நகையும் உவகையும் ஒழிந்த ஆறுசுவைகளும்; வெகுளிச்சுவை பெருவரவிற்றாகும். இந்திரசாலம், மாயை, போர், கலாம், சூரியசந்திர கிரகணம் என்றின்னன வருதல்வேண்டும். விளைவு (அவமர்சம்) என்னும் நான்காஞ்சந்தியொழிந்த நான்கு சந்திகளும் வந்து இடிமம் நான்கு அங்கங்களால் முடியும். நாடகபாத்திரர் பதினாறுபேர்.

54-55 [வியாயோகத்தின் இலக்கணம்] கருப்பம் விளைவு என்னும் இரண்டொழிந்த மூன்றுசந்திகள்பெற்று ஓரங்கத்தினுல் ஒருநாளில் நடந்த நிகழ்ச்சிகளைக் காட்டும் வியாயோகமானது பல ஆண்பால் நாடக பாத்திரர்களைக் கொண்டு இடிமத்துக்குக் கூறிய சுவைகளையெய்திப் பெண்கள் காரணமல்லாத பிறகாரணங்களால் விளைந்த ஒரு போரை நடித்துக்காட்டுவதாக வரும்.

56-61. [சமவகாரத்தினிலக்கணம்] நாடகத்துக்குப்போல ஆமுகம்வருதல்வேண்டும். பொருள் தேவாசுரரோடுதொடர்புடைய பிரசித்த சரிதை. சந்தி விளைவு ஒழிந்த நான்கும். விருத்தி நால்வகைவிருத்தியும் (கைசிகிவிருத்தி சிறுபான்மை, ஏனைய பெரும்பான்மை;). நடர் பன்னிருவர், தீரோதாத்தவகையினராகிய தேவாசுரர்; சுவைகள்: சமுத்திர மதன (பாற்கடல்கடைந்த) சரிதையினுட்போல வீரச்சுவை பெரும்

பான்மையாகவும் ஏனைய சிறுபான்மையாகவும் வருதல்வேண்டும். மூன்று அங்கங்களாகி மூவகை வஞ்சனை (கபடம்), மூவகை யுவகை (சிருங்காரம்), மூவகைக் கலக்கம் (வித்திரவம்) என்னும் இவை வந்து முடியவேண்டும். முதலங்கம் இரண்டுசந்திகளைக்கொண்டு பன்னிரண்டு நாழிகைப்பொழுதினுள் நடந்தநிகழ்ச்சிகளைக் கொள்ளவேண்டும். இரண்டாம் மூன்றும் அங்கங்களின் வரையறை முறையே நான்கு, இரண்டு நாழிகைகளாகும். சமவகாரத்தில் விரிநிலையும் (விந்துவும்) முன்னுரைக் காட்சியும் (விஷ்கம்பமும்) வாரா. வீதியின் உட்பிரிவுகளைப் பிரகசனத்தினுட்போலவே இதனுள்ளும் உபயோகிக்கலாம். மூவகை வஞ்சனையாவன: சரிதத்தின் இயல்பானதன்மையினாலும், தெய்வச்செயலாலும், பகைவராலுந் தோற்றுவன. மூவகைக் கலக்கமாவன: நகரத்தை முற்றுகையிடுதலினாலும், போரினாலும் புயலினாலும் பெருநெருப்பினாலும் ஏற்படுவன.

62—63 [வீதியின் இலக்கணம்].

வீதி உத்காத்தியகம் முதலாகக் கூறப்பட்ட பதின்மூன்று உட்பிரிவுகளை யுடையது. ஒருவரோ இருவரோ நாடகபாத்திரராக வரல்வேண்டும். நாட்டியவகையாகத் தனித்துவருமிடத்துக் கைசிகிவிருத்தியால் நடந்து பாணத்தைப்போல் அங்கமுஞ் சந்தியுமுடையதாய் உவகை (சிருங்கார)ச்சுவை பெரும்பான்மையாகவும் மற்றியாதாயினு மொரு சுவை சிறுபான்மையாகவும் வரப்பெற்று முடியும்

64—65 [உத்சிருஷ்டிகாங்கத்தி னிலக்கணம். நாடகத்தினுட்பிரிவாகிய அங்கத்தினின்று வேறுபடுத்திக் காட்டும்பொருட்டு வாளா அங்கமென்னாது, உத்சிருஷ்டிகாங்கமெனக் குறியீடுசெய்தார்.] பிரக்கியாதமான பழங்கதையைக் கற்பனையால் விரித்துக்கூறும் உத்சிருஷ்டிகாங்கமானது அவல(கருணை)ச்சுவைமேவிச் சாதாரணமனுஷரைத் தலைவராகக்கொண்டு, பாணத்தைப் போன்று சந்தியும் விருத்தியும் பெற்று

மகளிர் பிரலாபம்வந்து முடியவேண்டும். போர்நிகழ்ச்சி, வெற்றி, தோல்விகளைச் சொற்களினால் விரித்துரைக்கவேண்டும். நிகழ்ச்சியினாற் காட்டுதல் கூடாது.

66—68. [ஈஹாமிருகத்தின் இலக்கணம். மிருகம்—மான். நாணியோடுகின்ற இளமான்போன்ற பெறுதற்கரியாளைத் தலைவன் றொடர்ந்து செல்லுமியல்பினைக் கூறுதலின் ஈஹாமிருக மெனப்பட்டது]. இது பழங்கதையும் கற்பனைக்கதையுங் கலந்துவந்து மூன்றுசந்திகளடங்கிய நான்கங்கங்களால் முடிவது. தலைவனும் தலைவனது பகைவனும் தீரோத்ததவகையினராய தேவராகவோ மானிடராகவோ இருக்கலாம். ஒரு தெய்வப்பெண்ணை அவள்மனவிருப்பத்துக்குமாறாக ஒருவன் காதலித்து அவளைப் பற்றுதற்குப் பலசூழ்ச்சிகளுஞ் செய்ததாகக் காட்டவேண்டும். போர் தலைவனது மரணம் என்னும் இவற்றை வெளிப்படுத்திக்காட்டுதல் கூடாது.

69. ஈண்டுக் குறிக்கப்பட்டிருக்கும் பத்துவகைநாட்டியங்களின் (தசரூபகத்தின்) இலக்கணத்தையும், உத்தமக்கவிகளியற்றிய பிரபந்தங்களையும் ஆராய்ந்துணர்ந்தோர் தாங் கருதியபொருளின்மேலே விழுமிய மொழியும் ஒழுகிய ஓசையும் நிரம்பப் பலவகை யலங்காரங்களோடுங் கூடிய பிரபந்தங்களை எளிதி னமைப்பர். [நாடகம் என்னும் மொழி சிறப்பியல்பாகச் சகல லக்ஷணங்களும்பொருந்திய நாட்டியவகையைக் குறிக்குமெனவும் பொதுவியல்பாக நாட்டியவகையனைத்தினையுங் குறிக்குமெனவும் உலகவழக்கானும் ஆன்றோர்வழக்கானும் அறிகின்றோம்].

(தொடரும்.)

விபுலாநந்தர்.

உ

வள்ளுவர் திருநாள்.

[நாளது மாசிமாஸத்தில் வள்ளுவர் திருநாளன்று நெல்லை மாணவர் சங்கத்திற் செய்த பிரசங்கத்தின் குறிப்பினின்றும் எழுதியது]

தமிழ்நாடும் தமிழ்மொழியும் முயன்ற அருந்தவப்பயன் காரணமாக, ஏறக்குறைய இரண்டாயிரம்வருஷங்களுக்கு முன்னர், நமதுநாட்டில் திருவவதாரம்செய்தருளிய வள்ளுவரென்னும் புண்ணியமூர்த்தியை நினைவுகூரும்பொருட்டு நாம் இன்று கூடியிருக்கின்றோம். இவரது அவதார-நிகழ்ச்சியைப் போன்று அத்துணைச் சிறப்புடையதாகப் பிறிதொருநிகழ்ச்சி தமிழ்மொழிச் சரிதத்தில் உளதென்று கருதுவார் பெரும்பாலும் இல்லை. தமிழணங்கு தலையெடுத்து அவளது புதல்வர்களாகிய நமக்கு இன்முகம் காட்டிநிற்பது இத்திருவவதாரத்தின்பயன் கொண்டேயாகும். தமிழ்-நாடு புண்ணியபூமியாகக் கொள்ளப்படும் பெருமைவாய்ந்தது இவ்வவதாரத்தின் பெருமைபற்றியேயாகும். தமிழ்மக்களாகிய நாம் கௌரவமுடையதோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்களென்று எண்ணிடப்பெற்றுவருதற்கும் இவ்வவதாரமே காரணமாகும். இங்ஙனமாகத் திருவவதாரம் செய்தருளிய மஹா-புருஷனை அடிக்கடி ஞாபகத்தில்வைத்துப் போற்றிப் பாராட்டவேண்டுவது தமிழ்மக்களாகிய நமக்கு உரிமையும் கடமையும் ஆகின்றது. தமிழ்மொழியோடு பிறந்த நமக்கன்றிப் பிறமொழிகளைப் பயிலும் அந்நியர்க்கு இப்பேருரிமை இல்லாதுபோயிற்று. இவ்வுரிமையொன்றினாலேயே நாம் இறுமாந்து தலைநிமிர்ந்து நடப்பதற்கு அர்ஹதையுடையாராயினோம். நம் தமிழ்-மக்கள்மீதும் நம் தமிழ்-மொழிமீதும் பிறர் அழுக்காறு கொள்ளும்படி அத்துணைப் பெருமை அளித்தது இப்பேருரிமையென்றே கருதுகின்றேன். இங்ஙனம் சிறப்பும் பெருமையும் நமக்கு அருள்செய்த புண்ணியமூர்த்திக்கு நாம் என்றும் நன்றிபாராட்டுங் கடப்பாடு உடையாராயிருக்கின்றோம். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை-செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பதன்றோ தமிழ்-வேத விதி?

ஆனால், நமது உரிமையைப் பாராட்டி மகிழ்தற்கும் நமது நன்றி யறிதலை வெளிக்காட்டிக் கொள்ளுதற்கும் மாத்திரமன்று நாம் இன்றைக்குக் கூடியிருப்பது. பூர்வத்தில் நாமிருந்த உன்னதநிலைமையி னின்றும் தவறிவிட்டோம். நமது பண்டைப்பெருமை நம்மினின்றும் விடைபெற்றுக்கொண்டுபோய்விட்டது. நாம் அதோ-கதியில் வீழ்ந்து கிடக்கின்றோம். இப்போது முழுவதும் அடிமைகளாகிவிட்டோம். அறிவிலும் ஆண்மையிலும் அன்பிலும் நாம் அடிமைகளாய் உழலுகின் றோம். அன்பிற்கும் அடைக்குந்தாழ் உண்டென்பது இப்போது அறியலானோம். 'கூற்றுடன்று மேல்வரினும் கூடியெதிர்நிற்கும் ஆற்ற' லுடையாராயிருந்தோம் என்பது பண்டைப் பழங்கதையாய்ப்போயிற்று. ஒருகாலத்தே நமது தமிழ்-மக்கள் எங்கணும் சென்றுலவி வாணிகம் செய்து தமிழ்-நாட்டுப் பொருள்களை உலகிற்கெல்லாம் உதவிவந்தனர். நுகர்ச்சிப் பொருள்களேயன்றி, அறிவுப்பொருளும் உலகமனைத்திற்கும் கொடுத்துதவும் அத்துணையளவாக நம்மிடமிருந்தது. அவ் வறிவுப் பொருளை மேன்மேலும் விருத்திசெய்யாது வறிதே வாழ்ந்து எல்லா வற்றையும் இழந்தோம். 'அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்-என்னுடைய ரேனும் இலர்' என்ற உண்மையை மறந்துவிட்டோம். பிற நாடுகளில் அறிவு நாடோறும் பெருகிவளர, நம்நாட்டில் அறிவு-வறுமை குடிகொண்டுவிட்டது. மேலைநாடுகளினின்றும் அறிவுப்பொருள்பெற வேண்டி நாம் இரந்து நிற்கின்றோம். தமிழ்-நாட்டில் அஞ்ஞான-இருள் பரந்து நிலைத்திருக்கின்றது. இவ் வஞ்ஞான-இருளில் உழன்று தத்தளிக்கும் நமக்கும் உய்தியுண்டென்று உணர்த்தி நம்மை நன்னெறி யுய்க்கும் ஓர் தெய்வவொளியை நாம் அடிக்கடி நோக்கி நெறிப்படுதல் வேண்டுமன்றோ? இவ்வியல்புடைய தெய்வ-ஒளி யொன்றை நோக்கி நெறிப்படுதற்கே நாம் இன்று ஒருங்குகூடியிருக்கின்றோம். தமிழ் நாடனைத்தும் இத் தெய்வவொளியை யின்று தரிசித்து உய்திகூடும்படி இறைவன் அருள்புரிவாராக!

இத் தெய்வப்பேரொளியானது தோன்றியகாலம் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னென்று கூறுவர். தமிழிலக்கிய சரித்திர ஆராய்ச்சியாளரில் ஒருசிலர் இதனை ஒப்புக்கொள் ளாமலிருத்தல்கூடும். ஆனால், சிலநூறுவருஷங்கள் முன்பின்னாகக் கூறிக்கொள்வதில் எனது நோக்கம் பழுதுபடுவதில்லை. எனது கருத்

தெல்லாம் பெருமக்களது அருந்தோற்றத்தால் விசேஷித்து விளங்கும் பிரகாசமின்றித் தமிழ்ச்சரித்திரமண்டலம் வறிதேயிருந்தகாலத்து 'வள்ளுவர்' என்று நாம் கொண்டாடும் இத் தெய்வவொளி தோன்றியது என்பதே. அங்கங்கே சிறு சிறு நக்ஷத்திரங்கள் ஒன்றுசேர்ந்து கூட்டமாக விளங்கியிருந்தன. சங்கப்புலவர்கள் என்று நாம் கருதும் நக்கீரர், கபிலர், மாங்குடி மருதனூர் முதலானோர் ஒருங்குகூடிச் சிற்றொளிநல்கித் திகழ்ந்துவந்தனர். சிலப்பதிகாரமியற்றிய சேரர்பெருமானாகிய பெரு நக்ஷத்திரம் இன்னும் விண்ணில் ஒளிரவில்லை. தண்ணிய அருளொடு மிளிரும் தேவார-ஆசிரியர்களும் ஆழ்வாராதியர்களும் இன்னும் இன்னொளி நல்கவில்லை. சிந்தாமணியை உதவியருளிய திருத்தக்கதேவர் என்னும் செவ்விய நல்லொளி இன்னும் முகஞ்செய்து திகழவில்லை. திருத்தொண்டர்புராணம் என்னும் சைவ மெய்ந்நூல் அருளிய சேக்கிழார் எனப்படும் விடிவெள்ளி விண்ணில் இன்னும் அரும்பவில்லை. விண்ணையும் மண்ணையும் தன்னிடமாகக் கொண்டு தனது பேரொளிப் பெருவெள்ளத்தால் இருபேருலகையும் ஜோதிஸ்வரூபமாக்கிய கம்பர் என்னும் கவிகுலபாஸ்கரன் இன்னும் உதயஞ் செய்யவில்லை. பேரொளி மண்டிலங்கள் ஒன்றுமின்றிச் சிறுவெள்ளிகள் சிற்றொளிசெய்து விளங்கிய தமிழ்ச் சரித்திர மண்டலத்தே நாம் இன்று போற்றித் தொழுகின்ற தெய்வவொளியாகிய திங்கள் உதயமாயிற்று.

> 'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும்
> கொங்கலர்தார்ச் சென்னி குளிர்வெண் குடைபோன்றிவ்
> வங்க ணுலகளித்த லான்' (சிலப்பதிகாரம்)

என இயற்கைத் திங்களை வணங்கும் மரபுடைய நாம் அறிவுநலந் திகழ்ந்தொளிரும் வள்ளுவரென்னும் செயற்கைத் திங்களையும் வணங்கி வாழ்த்துவோமாக!

இப் பூவுலகிலுள்ளவர்க்கு நிலவும் மகிழ்ச்சியும் ஒருங்கு தந்து விளங்கும் இயற்கைத்திங்கள் பூமியினின்றும் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ளது. எவ்வாறு, எப்பொழுது அது தோற்றியது ? அதன் சரித்திரம் யாது? இவைபோன்ற கேள்விகளுக்கெல்லாம் நமக்கு விடை கிடைப்பதரிது. திங்களின் தண்ணிய ஒளி-மண்டலத்தின் அழகிலே இன்புறுவதோடு நமது மனம் அமைதியுறு

கின்றது. அதன் சரித்திரம்பற்றிய கேள்விகள் யாவும் நமது அகங்காரத்தாலும் ஆசைப் பரபரப்பினாலும் எழுகின்றன. சிலசில விடைகளை அனுமானிக்கின்றோம். சிலசில விஷயங்களை நமது மனோபாவனையால் பாவனைசெய்கின்றோம். சிறு குழந்தைகள் கூனற்கிழவி அதில் வசித்துவருவதாகப் பாவிக்கின்றார்கள். வயதுமுதிர்ந்துவிடின் குழந்தை-மதியும் நம்மைவிட்டு அறவே யொழிந்துவிடுதலுண்டோ? கவிதா-கற்பனை யென்பது இக் குழந்தை-மதியோடு ஏகதேசவொற்றுமையுடைய தென்பது பெரியதோர் உண்மையே யன்றோ? ஆகவே, நாமும் பாற்-கடலில் அம்புலி தோன்றியதாகப் பாட்டிசைக்கின்றோம்; அதன் கண் முயல் இருப்பதாக வியந்துரைக்கின்றோம்; அதனை ராகுகேதுக்கள் விழுங்கி யுமிழ்வதாகக் கதைவிளம்புகின்றோம். இங்ஙனமாகப் புனைந்துரைத்துக்கொள்வதன்றி உண்மையுணர்ந்துகொள்ளுதல் கஷ்டசாத்தியமாகின்றது. இதுபோலவே இன்று நாம் தொழுதுவாழ்த்தும் ‘வள்ளுவர்’ என்னும் தெய்வவொளிவீசும் திங்களின் சரித்திரமும் நம்மால் அறிதற்கரிதாயிருக்கின்றது. எத்தனையோ கட்டுக்கதைகள் புனையப்பட்டுள்ளன! ‘வள்ளுவர்’ என்ற பெயரால் அவர் ‘புலைச்சிமகன்’ என்ற கதை பிறந்தது. புலைக்குலத்தானுக்கு இத்துணைப் பேரறிவும் பெருங்கல்வியும் இருத்தல் அசம்பாவிதம் என்றெண்ணிப் புலைச்சிக்கும் பிராமணனொருவனுக்கும் அவர் பிறந்துள்ளதாகக் கதை யெழுந்தது. சிலர் ‘வள்ளுவர்’ என்ற சொல்லுக்கு வண்மையுடையார் என்று பொருள் கூறி இவ் விடர்க்கடலைக் கடக்கத் தலைப்பட்டனர். சீத்தலைச்சாத்தனார்க்குத் திருவள்ளுவரது திருக்குறளால் தலைக்குத்துத் தீர்ந்த கதை பன்முறையும் கேள்விப்பட்டிருக்கின்றோம். இக்கதை முழுவதும் தலைக்குத்து என்னுந் தொடருக்கு இரண்டுபொருள் இருப்பதினாலும் சீத்தலை என்பது ஓரூர் என அறியாமற்போனமையினாலும் ஏற்பட்டதாகும்.

‘சீந்துநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்-காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு’

இச்செய்யுளில் தலையிடி மருந்து கூறப்பட்டிருக்கின்றது. இம் மருந்தினை மோந்தமாத்திரையில் தலையிடி தீர்ந்துவிடும். குற்றம்நிரம்பிய

நூல்களைத் தினந்தோறும்செவிமடுத்து என்றுந்தீராததலைபிடியுடையரா யிருந்த சாத்தற்கு வள்ளுவரது முப்பாலால் அந்நோய் தீர்வெய்திற்று என்பதே இதன்கருத்து. இச்செய்யுளகத்துத் 'தலைக்குத்து' என்ற சொல் பயின்றுவந்திருத்தலால், குற்றமுள்ள நூல்களைக் கேட்குந் தொறும் கேட்குந்தொறும் சாத்தர் எழுத்தாணியைக்கொண்டு தம் தலையிற் குத்தித் தமது வினையை நொந்துகொள்வாரென்றும், சீத்தலைச் சாத்தர் என்றபெயர் வழக்குண்மையால் எழுத்தாணியாற்குத்துண்ட அவர் தலையிற் சீழ் எப்போதும் வடிந்துகொண்டிருந்ததென்றும், இச் சீழ்வடிதலும் எழுத்தாணிக்குத்தும் வள்ளுவரது முப்பால்-மருந்தினுல் அறவே இல்லாதுபோயினவென்றும் கட்டுக்கதைகள் கிளைக்கத் தலைப்பட்டன. இதுபோன்றதொரு தப்புணர்ச்சியின்காரணமாக, வள்ளுவர்க்குக் கற்பிற்சிறந்த இல்லறத் தலைவியொருத்தியை அடையும்பாக்கியமும் கிடைத்திருக்கின்றது.

'அடிசிற் கினியாளே அன்புடை யாளேப்
படிசொற் பழிநாணு வாளே—அடிவருடிப்
பின்தூங்கி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்
என்தூங்கும் என்கண் எனக்கு'

என்றசெய்யுள் வள்ளுவர் தமது பத்தினியாரைக்குறித்துப் பாடியதாகக்கருதப்பட்டது! இதனினின்றும் கற்புமாட்சிதெரிக்கவல்ல அழகிய பலகதைகள்புறப்பட்டுவிட்டன! ஆனால் இச்செய்யுள் வள்ளுவர்வாக்கன்றென்பதற்கு இச்செய்யுளகத்தே பொய்யாத வோர்சான்று நிலைபெற்றிருக்கின்றது. தூங்குதல் என்றசொல்லுக்கு உறங்குதல் என்றபொருள் வள்ளுவர்காலத்தில் இல்லை. சங்கநூல்களில் ஒரிடத்தேனும் இப்பொருளில் இச்சொல்லைக் காணுதல் கூடாது. வள்ளுவர்தாமும் இச்சொல்லைப் பலமுறை பிரயோகித்திருக்கின்றார்; பொருள் இதுவன்று. தூங்காமல் தூங்கிச் சுகம்பெற்றுச் சோம்பியிருந்த பிற்காலத்தே புகுந்த வழக்காகும் இது. பிற்காலத்துப் பிறந்த செய்யுளை வள்ளுவர்பால் ஏற்றி அவர்க்குத் திருமணம் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

மேற்குறித்தனபோன்ற கட்டுக்கதைகளால் ஒருண்மையை நாம் உணர்கின்றோம். வள்ளுவரது திருமேனிக்குத் தமிழ்-மக்கள் பண்டு தொட்டு இன்றுவரை இடையறாத அன்புபூண்டுவந்திருக்கின்றார்க

ளென்பதுவே அது. அநேக நூற்றாண்டுகளாகத் தமிழ்-மக்கள்தம் உள்ளத்தை வள்ளுவர் கொள்ளைகொண்டு உலவிவருகின்றார். நம்மோடொப்ப நம் மூதாதையர்களுக்கும் அவரது திருநாமம் சிந்தைக்கும் செவிக்கும் இனிதாயுள்ளது. அவரது சரிதம் எனப் பெயரிட்டெழுந்தனவெல்லாம் புண்ணியம்பயப்பனவாக நம்மவரால் கருதப்பட்டுள்ளன. கரையில்லாது பொங்கியெழுந்த அன்பின்பெருக்கத்தால் முற்கூறியன போன்ற கதைகள் முளைத்துச் செழித்து வளர்ந்தனவென்று நாம் உணர்ந்தவளவில், நமது மனம் பக்தியாற் கனிவெய்துகின்றதேயன்றி அவற்றின் பொய்ம்மை மெய்ம்மைகளைத் தெரிதற்கு ஒருப்படுவதில்லை. அன்றியும், அழகுள்ள கதைகளில் யார்தாம் ஈடுபடமாட்டார்கள்! யார்தாம் மயங்கிவிடமாட்டார்கள்! குணத்தாலும் செயலாலும் பெரியராயுள்ளவர்களைப் பற்றிய அழகிய கதைகள் நம்மை வசீகரித்துவிட்டனவென்று நாம் ஒப்புக்கொள்ளுதலிற் குற்றம் சிறிதேனும் உண்டோ? இல்லை. எனினும், ஒருவிஷயத்தை நாம் மறந்துவிடலாகாது. சந்திரனது ஒளிமண்டலத்தைக் கடந்து அதன் இயற்கையைக் கண்டறிதற்குக் கண் கூசி வலியற்றுநிற்பதுபோல, திருவள்ளுவரது புகழ்-மண்டலத்தைக் கடந்து அவரது உண்மைச் சரித்திரத்தை யுணர்தற்கு நம் அறிவு வலியற்று நிற்கின்றது. இதனை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுதல் பெரிதும் ஆவசியகம்.

வள்ளுவரது சரித்திரத்தில் ஒருண்மைமாத்திரம் நம்அறிவை விட்டு எவ்வகையானும் தப்பிச் செல்லமுடியாதபடி அகப்பட்டுக்கொண்டது. அறிவில் அகப்பட்டது என்றுகூடச் சொல்லுதல் தவறு. நமது பார்வையிலேயே மிக எளிதில் அது சிக்கிக்கொண்டது. அவ்வுண்மை யாது எனின், திருவள்ளுவனார் திருக்குறள் செய்தருளினார் என்பதேயாகும். இதனை அறியாதார் இல்லை. ஆனால் இதன் பொருண்மையும் பயனும் உணர்ந்தோர் மிகச் சிலரேயாவர். ஒருநூல் சிறப்புவாய்ந்ததெனின், அதன் ஆசிரியனது இதயத்தினின்றும்—அறிவினின்றும்—அது பிறந்திருத்தல்வேண்டும். ஆசிரியன் தன்னையே தனது நூலில் அமைத்துவிடுகின்றான். ஆசிரியனது ஜீவநாடி அவனது நூலிலேயே துடிதுடித்துக் கொண்டிருப்பதாகும். ஆசிரியனுக்குரிய விசேஷ ஆத்ம-குணமெல்லாம் நூலினகத்தும் காணப்படுதல் நிச்சயம். நூலிற் கூறுகின்ற வாழ்க்கைநிலையில், ஆசிரியன் தானே வாழ்கின்றான், தனது

கூரிய கட்புலன்கொண்டு அந்நிலைகளை நோக்குகின்றான். தனது நுண்மாணுழைபுலங்கொண்டு விஷயங்களின் உண்மையை நுனித்து உணருகின்றான். தனது பேராற்றலால் அவ்விஷயங்களின் பொருளைக் கூர்ந்துணர்ந்து தனது அரிய புலமைத்திறத்தால் அவற்றைப் பிறரும் கூர்ந்துணரச்செய்கின்றான். சுருங்கக்கூறின் ஆசிரியனது உயிர் வாழ்வின் சாராம்சமே அவனியற்றிய பெருநூலெனத்தகும். இக் காரணம்பற்றியே, மில்டன் என்னும் ஆங்கிலமகாகவி, 'அறிவிற்சிறந்த பெரியோனொருவன், அநித்யமாகிய தனது பூதவுடம்பு நீங்கியபின் என்றும் அழியாத புகழுடம்போடு நித்ய-வாழ்வு எய்துதற்பொருட்டுத், தனது இனிய ஆருயிரை வாசனையூட்டித் தைலத்தோணியில் வளர்த் திட்டுவைப்பது போன்றதாகும் அப்பெரியோனியற்றிய பெருநூல்' என்னுங் கருத்துப்பட வரைந்திருக்கின்றார். இதன் உண்மை அருஞ் சிறப்புவாய்ந்த நூல்களோடுமாத்திரமே பொருந்துவதாகும். ஓர் உயரியநூல் எல்லாவகையானும் உயர்ந்தோனொருவனது உள்ளத்தினின்றே தோன்றுதல்கூடும். நூலை நன்கு உணர்வதன்மூலமாகத் தான் ஆசிரியனை நாம் அறிதல் இயலும். தினந்தோறும் நம்முடன் பழகிவருபவரது குணகுணங்களும் நோக்கமுறையும் பெருமையும் சிறுமையும் அவர்கள் பேசும் குரலும் நமக்குத் தெரிவதுபோலவே, சிறந்த ஓர் நூலாசிரியனது நூலை நாம் கற்கக் கற்க, அவ்வாசிரியனது குணப்பெருமை அவன் உலகினை நோக்கும் முறை, அவனது குறை குற்றங்கள், அவன் சொல்லாடும் முறை—இவையெல்லாம் நமக்குப் புலப்படுகின்றன. இவ்வண்ணமாக வள்ளுவரைத் தமிழ்-மக்கள் நன்கு அறிந்துகொள்ளுதல் ஏலும். அவரது ஜீவ்ய-சரித்திரம் அவர் இயற்றியுள்ள ஒப்பற்ற 'திருக்குறள்'நூலில் விரிவாய் அமைந்திருக்கின்றது. திங்கள் வேறு. அதன் ஒளி-மண்டிலம் வேறு என்று நாம் கருதுவதில்லை. இங்ஙனமே, வள்ளுவர் வேறு, அவரது தெய்வத்திருக்குறள் வேறு என்பது இல்லை. திருக்குறள் என்பதுதான் வள்ளுவர். ஆகவே விரிவான சரித்திரம் ஒன்று வேண்டும் என்னும் ஆவசியகமே இலதாயொழிகின்றது. வள்ளுவரது வாழ்க்கையில் பிறமக்களோடொப்ப அவர் செய்திருக்கக்கூடும் சிறு செயல்களால் நமது மனம் அலைப்புண்டு உழலாதபடி அவரது வாழ்வின் தனிப்பெருநோக்கமாகக்கொண்டியற்றிய நூலின்கண்மாத்திரம் நம் அறிவைச் செலுத்திப் பயன்பெறுமாறு

ஆணையிடுவித்த ஊழ்விதிக்கு ஒருமுறையில் நாம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இவ்வாறாகத் தம்மை வேறென்று கொள்ளாது தமது ஆருயிர் நிலைத்து வாழ்வதற்கென்றே அரிதின் அமைத்துவைத்த உடல் போன்று உள்ளதாகும் வள்ளுவர் என்னும் தண்மதி அருளிய அருமைத்திருக்குறள். அழகிய இப்பெருநூலின் இயல்பினை ஒருவாறு சுட்டிக்கூறுவதோடு இப்போது அமைகின்றேன். அங்கண் விசும்பில் ஒளிரும் திங்களின் நிலவினை இன்னார்தாம் நுகர்தற்குரியார் என்பதில்லை. எளியார்க்கும் வலியார்க்கும் செல்வர்க்கும் வறிஞர்க்கும் சந்திரன் ஒன்றுபோல ஒளிநல்குகின்றது. பகை நண்பு என்பதும் இனத்தர் அந்நியர் என்பதும் நிலவுக்கில்லை. இதுபோன்றே இன்று நாம் போற்றுதற் கமைந்த வள்ளுவரென்னும் தெய்வவொளியானது யாவர்க்கும் வேறுபா டின்றி ஒன்றுபோல நெறிகாட்டி யுதவுந் தகைமையது. வள்ளுவர் தாமே ஓரழகிய செய்யுளில் தம் கருத்தை வெளியிட்டிருக்கின்றார்:

> 'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
> பேரறி வாளன் திரு'

என்பது அச்செய்யுள். நீர்நிறைந்த ஊருணி தன்னையடைந்தார்க் கெல்லாம் வேற்றுமையின்றி நீரையுதவி இன்பமளிக்கின்றது; இவ் வண்ணமே பேரறிவாளனது பெருஞ்செல்வமும் நெடிதுநின்று எல்லார்க் கும் வேண்டுவன தப்பாது உதவி இன்பம் அளிக்கின்றது: என்பது செய்யுளின் கருத்து. உலகத்திற் பேரறிவாளன் என்றழைப்பதற்கு வள்ளுவரைக் காட்டிலும் சிறந்த உரிமையுடையார் அரியர். இவர் தந்தருளிய 'திருக்குறள்' நூலைக்காட்டினும் பெரியதோர் செல்வம் உளதெனல் அரிதாம். செல்வத்துட் செல்வமாகிய இத்திருக்குறள் நீர்நிறைந்த ஊருணியை யொத்து நலம்பயக்கின்றது. அறிவுத்தாகத் தால் வருந்துவோ ரனைவரும் திருக்குறள்நூலால் அறிவுதவப்பெற்று இன்பமெய்துதல் கூடும். இல்லறநெறியில் நிற்குமவர்கள், துறவிகள், அரசர்கள், குடிகள், பகைவர்கள், நண்பர்கள்-இவ் வனைவர்க்கும் அறிவுப் பொருளை இப்பெருநூல் உதவுகின்றது. சுருங்கவுரைக்குமிடத்துப் பல் வேறுவகைப்பட்ட வாழ்க்கைநிலையிலுள்ளவர்க்கும் சிறந்த அறிவுரைக் களஞ்சியமாக விளங்குவது நமது தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் அருளிய தெய்விகப் பெருநூல்.

வள்ளுவனை வானில் நிலவிட்டொளிரும் தண்மதியத்திற்கு ஒப்பாகக் கூறிவந்தேன். எல்லார்க்கும் ஒப்ப வுதவி உய் நெறி காட்டுதலில் இது பொருந்தும். ஆனால் நமது முதற்பாவலர்க்கே தனித்துரிய வேறொரு பெருமையும் இருக்கின்றது. நிலவுப்பயன்கொள்ளுதல் வெளிமுற்றத்தும் மேல்மாடத்தும்தான் இயலும். பலகணி யில்லாத வீட்டினுள்ளே நிலவொளி பரவுவதில்லை. வள்ளுவரது தெய்வவொளியோ பாவிச்செல்லக்கூடாத இடமே யில்லை. விண்மதியம்போலக் காலத்தால் அதிதூரத்தில் ஒளிவிட்டுத் திகழ்ந்தபோதிலும், யாவரும் எவ்விடத்தும் கொண்டுசெல்லத்தரும் கைவிளக்குப்போல அடுத்துநின்றுதவும் தன்மை நாம் இன்று தொழுது வணங்கும் தெய்வவொளிக்கு உளதாகின்றது. இத்தெய்வவொளியால் தமிழ்மக்களாகிய நாம் இருள் நீங்கி உய்திபெறுவோமாக!

நின்று சுடரெறித்து நெஞ்சத் திருளகற்றி
இன்றுபோல் என்றும் இலங்கிடுக—துன்றுபுகழ்த்
தெய்வப் புலமைத் திருவள்ளுவர் என்னும்
மெய்வைத்த வேத விளக்கு.

S. வையாபுரிப்பிள்ளை.

1924ஹு டிசம்பர்மீ 30உ (ரக்தாக்ஷி ஹு மார்கழிமீ 16உ) காலை 9 மணிக்குக்கூடிய மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-ா-ா-ஸ்ரீ K. ராமையங்காரவர்கள், B. A., B. L., M. L. A. அக்கிராசனம் வகித்தவர்.
2. ,, V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்கள், B.A., B.L.
3. ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், B.A., B.L.
4. ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
5. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1924-ஞு எப்ரல்மீ முதல் நவம்பர்மீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய அடியிற் குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-௱-௱-ஸ்ரீ I. S. தெய்வங்கப்பெருமாள்பிள்ளை அவர்கள், இலஞ்சி, தென்காசித்தாலூகா.

(2) ,, சுவாமி விபுலாநந்தர் அவர்கள், ஸ்ரீராமகிருஷ்ண மடம், மைலாப்பூர்.

(3) ,, C. ராசநாயகமுதலியார் அவர்கள், Extra Office Assistant to the Government Agent, கச்சேரி, யாழ்ப்பாணம்.

III. ஸ்ரீபெரும்பூதூர் ஸம்ஸ்கிருத காலேஜ் புத்தகசாலையின் உபயோகத்துக்குச் செந்தமிழ்ப் பத்திரிகையை இனாமாக அனுப்பிவரும்படி தீர்மானிக்கலாயிற்று.

IV. தஞ்சாவூர் ஸரஸ்வதிமஹால் லைப்ரரி உபயோகத்துக்குச் செந்தமிழ்ப் பத்திரிகையை இனாமாக அனுப்பிவரும்படி தீர்மானிக்கலாயிற்று.

V. சென்னை Text Book Committee-க்கு இராமநாதபுரம் ஸேது ஸமஸ்தான வித்வான் மகா-௱-௱-ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்களை இச்சங்கத்தின்சார்பாய்க் கவர்ன்மெண்டார் நியமித்திருப்பதற்குச் சங்கத்தார் வந்தனமளிக்கின்றார்கள்.

VI. சங்கத்தின் வரவு செலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கப்பட்டது. சங்கம் பண்டிதர்களான Messrs. திரு. நாராயணையங்கார், ரா. சுப்பிரமணியக்கவிராயர், சு. நல்லசிவன்பிள்ளை இவர்கள் ஒவ்வொருவர்க்கும் மாதம் 5 ரூபாயும், பண்டித. ஹரிஹரையருக்கு மாதம் 10 ரூபாயும் இப்பொழுது ஏற்படுத்தியுள்ள சம்பளத்துக்குமேல் கொடுத்துவரவேணுமென்று மகா-௱-௱-ஸ்ரீ M. கோபாலகிருஷ்ணையரவர்களால் பிரேரேபிக்கப்பெற்று மகா-௱-௱-ஸ்ரீ V. S. ராமஸ்வாமி சாஸ்திரியவர்களால் ஆமோதிக்கப்பெற்று அவ்விதம் கொடுத்துவரலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

VII. சங்கம் ஸ்தாபகர் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்களின் படத்துக்கு 750 பிரதிகள் தன்னுடைய செலவில் அச்சிட்டுக் கொடுக்கவேண்டுமென்று மகா-௱-௱-ஸ்ரீ பண்டித அ கோபாலையரவர்கள் விரும்புகிறபடி அச்சிட்டுக் கொடுக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

மதுரை,
30—12—1924.

K. ராமையங்கார்,
அக்கிராசனம் வகித்தவர்.

உ

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

[௬௮-ம் பக்கத் தொடர்ச்சி.]

மந்தரை சூழ்ச்சிப் படலம்.

இராமன் முடிசூடுதலைத் தடுக்கும்படி கைகேயிக்கு மந்தரை யென்ற கூனி கூறிய தீய ஆலோசனையைப் பற்றிக் கூறுவது.

(சூழ்ச்சி - ஆலோசனை, இதுபோன்ற இடங்களில் அடையின்றியே துராலோசனை யென்ற பொருள் குறிக்கும். பெருங்கதை முகவுரை XIX-ம் பக்கம் பார்க்க.)

தசரதன், சோதிடரை "இராமனுக்கு முடிசூட்டுதற்கு எத்தினம் நற்றினம்" என, அவர்கள் "நாளைத்தினம் நல்லதினம்" என, வசிட்டரை "அதற்கு வேண்டுவன விரைவிற்செய்தலும் இராமனுக்கு உறுதிப் பொருள்களை உணர்த்தலும் வேண்டும்" என, அவன் இசைந்து, இராமனைக் காணும் ஆசை முன்செல்ல, அதற்கு முந்துவான்போல விரைந்து சென்று அடைந்து, "அரசன் உனக்கு நாளையே அரசைத் தருவான். அரசர்க்குரிய உறுதிப்பொருள்களைக் கூறுவேன். கேட்டுக் கடைப் பிடிப்பாயாக." என்று கூறுவானானான்.

"ஐம்பொறிகளை அடக்கிய அந்தணர் அவற்றை அடக்காத அமரரினும் அதிகராவர். ஆதலால் அவர்களை வணங்கி அவர்கள்சொற்படி செய்வாயாக. கல்வி கேள்விகளால் தெளிவாகத் தெரிந்த தருமங்களையும் நடுவுநிலைமையையும் எல்லாஉயிர்களிடத்தும் அருளுடைமையையும் நீங்குவோர் திரிமூர்த்தியராயினும் அழிந்துவிடுவார்கள்.

223. சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த, நினக் கிலை யாயினும்,
ஏத மென்பன யாவையும் எய்துதற்
கோதும் மூலம் அது என ஓர்தியே.

இ-ள். நீதிகளை (இயல்பாக) உடைய இராமா! சூதாட்டம் முதலாகச் சொல்லப்பட்ட பெருந்துன்பங்கள் (விளைவிக்கும் துன்மார்க்கத் தொழில்கள்) உனக்கில்லையாயினும், அவைகள், கேடுகள் என்பவை யாவையும் அடைதற்குக் காரணமென்று (நீ தெரிந்துகொள்ளல் நலமாதலால்) தெரிந்துகொள்வாயாக.

துயர் - துன்பம், துன்பத்துக்குக் காரணமான கட்குடி பரத்தையரைச்சேர்தல் உயிர்க்கொலை முதலிய தீச்செயல்களைக் குறித்தது. ஏதம் - கேடு. ஓர்தல் - உணர்தல்.

நீதியுடையான் சூது முதலிய தீய செயல்களில்லாளுகவும் அவற்றின் தீய பயன்களைத் தெரியும் புத்தியுள்ளாளுகவும் இருக்கும் இயல்பு குறிக்க 'நீதிமைந்த....ஓர்தி' என்ருன். அத்தகையாளனுக்குச் செய்யத் தகாத தீச்செயல்கள் இவையெனப் பிண்டமாகக் குறிப்பித்தலே போதுமென, இவ் வொரேபாட்டாற் குறிப்பித்துவிட்டுச் செய்யத்தக்க நற்செய்கைகளுட் சிறந்தவைகளைப் பல பாட்டுக்களால் விளக்கிக் கூறுதல் காண்க.

224\. யாரொ டும்பகை கொள்ளில னென்றபின்,
போ ரொ டுங்கும்; புகழ் ஒடுங் காது; தன்
தார் ஒ டுங்கல்செல் லா (து:, அது தந்த பின்
வேரொ டுங் கெடல் வேண்டல் உண் டாகுமோ?

இ-ள். (ஓர் அரசன், பலத்தில் தனக்கு உயர்ந்தார் தாழ்ந்தார் ஒத்தார்) எவரோடும் பகைகொள்ளேனென்ற (உறுதிசெய்த) பின்பு (அவனுக்குப்) போர் சுருங்கியொழிந்துவிடும்; புகழ் சுருங்காது (வளரும்); சேனை (போரின்மையால் நாசமில்லாததாகக்) குறையாது: அந்தப் பகைகொள்ளாமையை (ப் பகைவர்க்கு அவர் பகைக்குப் பிரதியாக) த் தந்த பின்பு (பகைமையானது முன்பகைவராயிருந்தவர் மனத்தைவிட்டொழிந்துவிடுமாதலால், அப் பகைவர்) அடியோடழிதலை விரும்புதல் (ஆகிய எண்ணமே, உண்டாகுமோ? (உண்டாகாது, உண்டாகுதற்குக் காரணமாகிய பகைமை இன்ருகிவிட்டதனுல்.)

தார் - சேனை. ஒடுங்கல்செல்லாது—ஒடுங்காது ('இமைத்தல் செல்லான்—இமையான்' எனச் சிந்தாமணி 2506-ல் வரல் காண்க).

'அது' முதலடியில் வந்த 'பகைகொள்ளாமை'யைச் சுட்டியது. 'வேரொடுங் கெடல்' என்பதன் முன் 'பகைவர்' என்பது அவாய்நிலையால் வந்த சொல்.

இதுபோலக் கையடைப்படலம் கஈ-ம் கவியில் "கொற்றவன், திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்று" என்பதில் 'தூதரை' என்ற சொல் 'திருவின்கேள்வனை' என்பதன்முன் அவாய்நிலையாகவந்தது காண்க.

'பகையைப் பகையால் தணித்தல் முடியாது, தீயைத் தீயால் தணித்தல் முடியாதவாறுபோல; பகையை அன்பால் ஒழித்தல், தீயை நீரால் ஒழித்தல்போலத் தக்கமுறையாம். பலத்திறற் பகைவனை வெல்வோன், பகைவனது உடலையே வென்றவனாவான்; பகைவனை அன்பால் வெல்வோனே, அவன் உடலோடு உள்ளத்தையும் வென்றவனாவான்' பலத்தால் வெல்லப்பட்ட பகைவன், சமயம் வாய்த்தால், கேடுசெய்வான்; அன்பால் வெல்லப்பட்ட பகைவனோ, எக்காலத்தும் கேடுசெய்யான்; என்ற கருத்தை இப்பாட்டு அடிப்படையாகக் கொண்டிருப்பது காண்க.

["ஐம்பொறிகளால் அநுபவிக்கும் அநுபவங்களை மிகைபடவிடாமற் குறைத்துப் பொருளைத் தினமும் சம்பாதித்துப் பகைவர் பயந்து பதறும் பலசாலியாய் அரசாளும் அரசனே அரசனாவான். அவனுக்கு, நல்லொழுக்கம் வாட்படையினும் மேற்படையாம்; அவ்வொழுக்கம் அவன் அழியாமைக்கும், அன்புடைமை ஆக்கத்துக்கும் காரணமாம்: ஆயுதம் செலுத்தலினும் அன்பு செலுத்தலே மேல். அரசன் எவ்வளவு வீரனாயினும் அமைச்சர்சொற்படி * ஆற்றலே அவனுக்குச் சிறந்த † ஆற்றலாம். இன்சொல்லினன், கொடையாளி, தீர்க்காலோசனை செய்வோன், முயற்சியுடையான், சொல்லும் நினைவும் தொழிலும் சுத்தமானவன், நீதிமான் ஆகிய அரசனுக்குக் கேடுவருமாறு கிடையாது"

என்று அரச தருமங்களை வசிட்டன் எடுத்துச்சொல்லி, இராமனைத் திருமால்கோயிலுக்கு அழைத்துச்சென்று வணங்கித் திருமாலை அபிடேகஞ்செய்து, அலங்கரித்துப் பூசித்து, வெண்ணிறத் தருப்பையாதனத்தில் வீற்றிருக்கச்செய்துவிட்டு அதனைத் தசாதனுக் கறிவித்தான். அவன் "நாளைத்தினம் இராமன் முடிசூடும் நாள்" என்று நகரத்

---

* செய்தல். † பலம்.

தாருக்குத் தெரிவித்து நகரை அலங்கரிக்கும்படி கட்டளையிட்டான். அதனை அறிந்த அனைவரும், அளவற்ற அகமகிழ்ச்சியடைந்து சூரியனையும் திருமால் மார்பிலணிந்த கவுத்துவமணியையும் அதிகமாக விளங்கச்செய்வார்போல, இயல்பாக முழுத்த அழகுடைய நகரத்தை அதிக அழகு அடையும்படி அலங்கரிப்பாராயினர்.

அலங்கரிக்கப் பெற்ற அந்நகரத்தில், வெண்மை கருமை செம்மை முதலிய அநேக வருணங்களையுடைய சேலைக்கொடிகள் பறப்பன, பல நிறப் பறவைகள் பறப்பனபோன்றன. மாதர்கள் கழுத்துப்போலக் கமுகுகளும் தொடைபோல வாழைகளும் நாட்டப்பட்டன. அவர்கள் பல்வரிசைபோல முத்துமாலைகள் தூக்கப்பட்டன. வெண்ணிற உறைகள் பொதிந்த மாணிக்கத் தூண்களும் பவளத்தூண்களும் விபூதி உத்தூளித்த *விமலனையும் பனிமூடிய பாலசூரியனையும்போலத் தோன்றின. குதிரைகள் பூட்டிய தேர்த்தொகுதிகள், அந்நகரின் அழகு காண நாடிப் போந்த தெய்வவிமானங்கள் போன்றன. நெற்றிப்பட்டம் சொலிக்க யானைகள் திரிவன, உதித்த சூரியனுடன் உதயகிரி பல உலவுவன ஒத்தன.

அந் நகரத்தின் அழகு காண வந்த அமரர் அங்கே ஐசுவரியமும் அழகும் அநுபோகப் பொருள்களும் அளவின்றி அமைந்திருத்தலால் அந்நகர் †தந்நகர் போலத் தோன்றக் கண்டு, அவர்கள், அந்நகரிலோ †தந்நகரிலோ எந்நகரிலே யிருக்கின்றோமென் றெண்ணுவாராயினர்.

இவ்வாறாக, அந்நகர் பொன்னகர்போல அலங்கரிக்கப்பட்டு விளங்குதலுற்ற வேளையிலே, திரிலோகங்களுக்கும் தீங்கிழைத்த தீயோனாகிய இராவணனுடைய தீவினைப்பயன்களெல்லாம் திரண்டு ஒரு வடிவுகொண்டாற் போன்ற மந்தரை யென்ற கொடியமனம்படைத்த கூனி வெளிப்பட்டாள்.

(‡அவள், இராமன் பாலப்பருவத்திலே விளையாட்டாகத் தன் கூனிலே வில்லாலெய்த உண்டை பட்டு வருத்தமுற்றுக் கூன் நிமிரப் பெற்றவள். அவள், அவனால் தான் வருந்தியதுபோலத் தன்னால்

* சிவன். † தம் நகர்.

‡ ஸ்ரீசுப்பராயசெட்டியார் இந்தப்படலம் 'நாற்கடல்' என்ற செய்யுளுக்குச் செய்திருக்கும் உரையைப் பார்க்க.

அவன் வருந்தவும், முடங்கி ஒடுங்கியிருந்த தன் உடம்பு நிமிர்ந்து வளர்ந்து அழகுற்றதுபோல அடங்கி யொடுங்கி யிருந்த அவன் புக ழுடம்பு ஓங்கிவளர்ந்து பெருமையுறவும் கருதினள் போன்று) இராமன் முடிசூடுகின்றனென்று கேட்ட மாத்திரத்தில், நெஞ்சு படபடவென்று துடிக்க, அந்நெஞ்சில் நெடுநாளாக நிலைத்திருந்த கோபத்தீ குதித் தெழுந்து கண்கள்வழியே சுவாலை வீச, அத்தீ வெடித்தாற்போன்ற உரத்த சொல்லுடையளாய்க் கைகேயியின் மாளிகையை அடைந்து, அங்கே, திருப்பாற்கடலிலே செப்பவளக்கொடி செந்தாமரை பூத்துக் கிடந்தாற்போல, வெண்மலர் விரித்த மெத்தையிலே சிவந்த திருமுக மண்டலம் திவ்விய தேசசோடு பொலியக் கருணை பொழியும் கண் மூகிழ்த்து உறங்கும் கைகேயியைக் கிட்டித் தூக்கம் நீக்கப் பாதத்தைத் தொட்டாள். அவள் உணர்ந்து தூங்குதல் நீங்கியும் நீங்காமலுமிருக் கும்போதே, அவளை நோக்கி மந்தரை கூறுவாளானாள்.]

225. "அணங்கு வாள் விட அரா அணுகும் எல்லையும்
குணம் கெடா தொளி விரி குளிர் வெண் திங்கள் போற்
பிணங்கு வான் பேரிடர் பிணிக்க நண்ணவும்,
உணங்குவாய் அல்லை நீ உறங்கு வாய்!" என்றாள்.

இ - ள். துன்பஞ்செய்யும் (இராகுவென்னும்) பாம்பு (தன்னை விழுங்க) நெருங்கிவிட்ட பொழுதிலும் (தன் ஒளித்) தன்மை சிறிதும் கெடாமல் ஒளிபரப்புகின்ற குளிர்ந்த வெண்மதிபோல, மிகப்பெரிய துன்பம் உன்னைப் பற்றிக்கொள்ள அணுகி யிருக்கவும், (முகம்) வாடா திருக்கின்றாய்! (ஒரு சிந்தையுமின்றித் தூங்கவும் செய்கின்றாய்! (என்னே உன் மதி இருந்தவாறு!)

அணங்குதல் - வருத்துதல் - துன்புறுத்தல் (பரிபாடல். வாள் - ஒளி. குணம் - தன்மை. பிணங்குதல் - மாறுபடல். வான் - பெருமை. வான் பேரிடர் - மிகப் பெரிய துன்பம். பிணித்தல் - கட்டல். உணங் குதல் - வாடுதல்.

இப்பாட்டில் உபமான உபமேயங்கள் ஒன்றுக்கொன்று ஆச்சரிய கரமான பொருத்தமுடையனவாயிருத்தல் ஆழ்ந்து ஆராய்ந்து அறிந்து ஆனந்திக்கத்தக்கது.

[மேற்கூறியவாறு மந்தரை கூறக் கைகேயி, "என் பிள்ளைகள் சேமமாயிருக்கின்றார்கள். ஒவ்வொருவரும் அறநெறி வழுவாதொழுகுகின்றார்கள். அப்படி இருக்க, எப்படி எனக்குத் துன்பம் அடுக்கும்? சற்புத்திரரைப் பெற்றாரெல்லார்க்கும் நற்கதி உண்டு. அப்புத்திரருள் ஒப்பற்றுயர்ந்த உத்தமனான இராமனைப்பெற்ற எனக்குத் துன்பமென்பதொன்றுண்டோ?" என, மந்தரை, "நீ உன் மதியால் தாழ்ந்தாய்: கோசலை தன் மதியால் வாழ்ந்தாள்" எனக் கைகேயி, "அவளுக்கு நாயகனோ ராசராசனான தசரத சக்கரவர்த்தி; குமாரனோ பாரெலாம் புகழ் பரதன்; இப்பொழுதுவாழ்வினும் மேலாக இனி வரும் வாழ்வு யாது இருக்கக்கூடியது?" என, மந்தரை "ஆண்மக்கள் சிரிக்க, ஆண்மை பழுதுபடத் தாடகையென்ற பெண்ணைக் கொன்ற இராமன் நாளை முடி சூடுவான். இதுதான் கோசலைக்கு வந்த வாழ்வு" என்றாள்.

அதனால், கைகேயி மனம் வேறுபடவில்லை; அந்த நற்செய்தியைக் கேட்டுக் கோசலை எவ்வளவு களிப்பாளோ அவ்வளவு களித்தாள். இராமனுக்கு முடிசூட மிகவிரும்பிய மனமுடைய தசரதன் இருவர் மனத்தும் இருந்ததனால், அவன் மனத்தை அவ்விருவர்மனமும் அம் முடிசூட்டு விஷயத்தில் ஒத்திருந்தன.

பூமியிற் சமுத்திரம் பொங்காநிற்கப் பூரணசந்திரன் பொலிதல் போலக் கைகேயி மனத்தில் அன்புக்கடல் பொங்கிப் பெருக, அவள் முகமதி விசேட தேசசோடு கூடி விளங்கியது; அப்போது, அவள் கழி பேருவகைகொண்டு ஓர் உயர்ந்த ஒளி மிகுந்த இரத்தினமாலையை மந்தரைக்குக் கொடுத்தாள். கொடுக்கவே, அவள் கோபித்தாள்; கொதித்து நோக்கினாள்; வைதாள்; மனமழிந்தாள்; பெருமூச்செறிந்தாள்; அழுதாள்; அம்மாலையை நிலங்குழிய வீசியெறிந்தாள்.

பின்பு, அவள் கைகேயியைக் கடிந்து பார்த்து, "நீ அறிவில்லாய்!, பைத்தியகாரி!, நீ பெற்ற பிள்ளையுடன் கோசலைக்குத் தொண்டுசெய்து துன்புறுவாயாக! நீ அவளுக்கு அடிமைத்தொழில் செய்தல்போல நான் அவள் தாதியர்க்கு அடிமையாய்ப் பணி செய்யேன். இராமனும் சீதையும் சிங்காதனத்தில் வீற்றிருக்க, உன் மகன் வெறுந் தரையிலிருக்கும்படியானபோது, நீ எதற்காக மகிழ்கின்றாய்?

பரதன் இறத்தல் நலம்: இறவாது உயிரோடிருக்கின்றான். யாது செய்துபிழைப்பானோ? நீ தாயானதனால் அவன் பிறந்தும் பிறந்த தனாலாம் பயனை அடையாமல், பிறவாதவனானான். இராமன் இலக்குமணனுடன் பூமியை ஆள்வானானால், பரதனைச் சத்துருக்கனோடு வனம் சென்று தவஞ்செய்யவிடுதல் நல்லது. பரதன் மண்ணை ஆண்ட மன்னர்வரிசையில்வைத் தெண்ணப் பிறந்திலன். இப்படி அவன் இருத்தலினும் இறத்தல் நன்று.

கட்டழகும் இளமையும் காயபலமும் கல்விநலமும் வில்லாண்மையும் வீரமும் வேறு அளவற்ற நற்குணங்களும் பரதனுக்கு அமைந்தது புல்லிற் கவிழ்த்த அமுதம்போலப் பயனற்றதாயிற்று. அவனை அரசன் பாட்டனூர்க்கு அன்று அனுப்பிய கருத்து, இன்று எனக்கு விளங்கியது.

அப்பா! பரதா! உன்னைத் தூரதேசத்துக்கு அனுப்பிவிட்டு இராச்சியத்தை இராமனுக்கு ஈந்த தந்தையும் கொடியன். அதனைத் தடாத தாயும் கொடியள்.

கைகேயீ! அரசர்குலத்திற் பிறந்து, அரசர்மனையில் வளர்ந்து, அரசர்குடியிற் புகுந்து அரசிகளுக்கு அரசியானநீ கரைகாணரிய கவலைக் கடலிற் கவிழ்கின்றாய்! உனக்கு உறுதியானதை உரைக்கவும் கேளாய்: நீயாகவும் உணராய்" என்றாள்.

இவ்வாறு மந்தரை கூறிய கொடுஞ்சொற்கள் நெருப்பில் நெய் சொரிந்தாற்போலக் கோபத்தை யெழுப்பக் கைகேயி கண்கள் சிவக்க அவளை நோக்கிக் கூறுவாள்.]

226 "வெயில் முறைக் குலக் கதிரவன் முதலிய மேலோர்
உயிர் முதற் பொருள் திறம்பினும் உரை திறம் பாதோர்
மயில் முறைக் குலத் துரிமையை மனு முதல் மரபைச்
செயிர் உறப் புலைச் சிந்தையால் என் சொனாய்! தீயோய்!"

இ-ள். கொடியாளே! வெயிலை (த் தனக்கு இயல்பான) குணமாக உடைய சிறப்புள்ள (எங்கள் குலமுதல்வனான) சூரியன் முதலிய எங்கள் முன்னோர்கள், (தங்கள்) உயிர்முதலிய பொருள்கள் தவறிப்

போவதாயிருந்தாலும் (அவைகள் தவறுமற் காத்தற்காகச்) சொற் றவ றுதவர்கள் (இதுவரை தவறு தநுசரித்துவந்திருக்கிற, மூத்தவனே முடிசூடுதலாகிய, மூத்த ஆண்குஞ்சுக்கே கலாபம் முளைக்கும் மயிற் குல முறைமையை உடைய எங்கள் குலப்பாத்தியத்தை (எங்கள் முன் ஞேனாகிய) மனு (வின் காலம் முதல் (வழங்கிவரும் பழமையான) வழக் கத்தைக் குற்றம் பொருந்தும்படி உன்னுடைய நீச புத்தியால் யாது செப்பினுய்.

முறை—குணம். குலம் - சிரேட்டம், சிறப்பு. திறம்புதல் - தவறு தல். செயிர் - குற்றம். புலை - கீழ்மை, தாழ்வு. புலைச் சிந்தை, புலை மக்கட்குரிய எண்ண மெனவும் பொருள்படும்.

மூத்த ஆண்மயிற்குஞ்சுக்கே கலாபம் முளைக்குமென்பது ஐதிகம்.

227 "எனக்கு நல்லையும் அல்லை! நீ என் மகன் பாதன்
தனக்கு நல்லையும் அல்லை! அத் தருமமே நோக்கில்,
உனக்கு நல்லையும் அல்லை! வந் தூழ்வினை தூண்ட,
மனக்கு நல்லன சொல்லினை, மதி இலா மனத்தோய்!"

இ - ள். அறிவில்லாய்! (என்னைத் தீமைசெய்யத் தூண்டுதலால்) நீ எனக்கு நல்லாயல்லாய்! (என் மகன் முறைதவறி அரசடையக் கூறுத லால், என் மகனுக்கும் நல்லா யல்லாய்! (அவரவர் வினைப்பயனை அவ ரவர் அடையச் செய்வது எதுவோ,) அந்தத் தருமம (என்ன பலன் உனக்களிக்கும்) என்பதை நோக்கினுல், (எங்களைத் தீவழியிற் செலுத்த முயன்ற தீவினைப்பயனை அடையறபாலையாய்) உனக்குமே நல்லாயல் லாய்! (முன செய்த) தீவினை (அதன் பயனைத் தரவேண்டிய காலத்தில்) வந்து உன்னைத் தூண்டுதலால், உன் மனத்துக்கு நல்லவை (போலத் தோன்றிய தீயவை) களை உரைத்தாய்.

ஊழ்வினை - தீவினை (சிந்தாமணி). மனக்கு - மனத்துக்கு.

228. "பிறந் திறந்து போய்ப் பெறுவதும் இழப்பதும் புகழே;
நிறந் திறம்பினும், நியாயமே திறம்பினும், நெறியின்
திறந் திறம்பினும், செய் தவம் திறம்பினும், செயிர் தீர்
மறந் திறம்பினும், வரன்முறை திறம்புதல் வழக்கோ?"

இ - ள். (ஒருவன் இந்த உலகத்தில் மனித சரீரம் பெற்றுப்) பிறத்தலும் இறத்தலும் செய்து (பிறத்தலுக்கும் இறத்தலுக்கும்

இடையே அந்த மனித சரீரத்தாற் பெறுகின்ற பொருள்கள் இழக்கின்ற பொருள்களிற் சிறந்ததாகப்) பெறுவதும் (புகழே,) இழப்பதும் புகழே; (அப்படிப்பட்ட புகழைப் பெறுதற்குக் கருவியாகிய) சரீரம் தவறினு லும், (நடுவு நிலைமையாகிய) நியாயம் தவறினாலும், நல்ல ஒழுக்கத்தின் உறுதி தவறினாலும், செய்யும் தவம் தவறினாலும், (க்ஷத்திரியர்க்குப் பிர தானமான) வீரம் தவறினாலும (சேட்ட புத்திர பாத்தியமான) பரம் பரைக் கிரமம் தவறுதல் முறைமையாமோ? (ஆகாது)

'செத்துப் போனான்' என்பதுபோல 'இறந்துபோய்' என்பது ஒரு சொல்நீர்மைத்தாய் வந்தது. 'புகழேல்' என்றும் பாடம். அப்பாடம் கொண்டால், 'புகழேல்' என்பதற்குப் (பெரியோர்) 'புகழென்கையினால்' எனப் பொருள் கொள்ளலாம். ஏல் - எனில் - என்கையினால் (முனி குவம் எனினே - வேண்டாமென்கையினாலே. பொருந. கo௭ சங்க அகராதி). நிறம் - சரீரம் (சங்க அகராதி). திறம்புதல் - தவறுதல். திறம் - உறுதி. செயிர் - குற்றம். தீர்தல் - நீங்குதல். மறம் - வீரம் உரையில் 'அப்படிப்பட்ட புகழைப் பெறுதற்குக் கருவியாகிய' என்ற விசேடணம், 'நியாயம்' 'நெறியின்திறம்' 'தவம்' 'மறம்' 'வான்முறை' என்பவைகளையும் விசேடித்து நிற்றல் காண்க.

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்—தோன்றலிற் றோன்றாமை நன்று" என்றவாறு "பிறந்திறந்துபோய்ப் பெறுவதும் இழப்பதும் புகழே" எனப்பட்டது. பொய்யாமை யென்ற அறத்தைச் சிறப்பித்து வற்புறுத்தப் "பொய்யாமை பொய்யாமை யாற்றின், அறம் பிற - செய்யாமை செய்யாமை நன்று" என்றாற்போல, "முன்னோர் முறையைத் தவறி விடலாகாது" என்ற அறத்தை வலியுறுத்தச் சரீரப் பாதுகாப்பு முதலிய பல அறங்களை அடுக்கிக் கூறி அவைகளை யெல் லாம் தவறவிட்டாலும் விடலாம். முன்னோர் முறையைத் தவறவிட லாகாதென்று கூறப்பட்டது. ஒருவனுடைய ஒழுக்கமாகிய கட்டடத் துக்கு மற்றைய அறங்களெல்லாம் மேற்பகுதிகளாக முன்னோர் முறை வழுவாமை அடிப்படையாமென்பது கருத்து. "உலக மென்ப துயர்ந் தோர் மாட்டே" என்ற கருத்துக் கிணங்க 'முன்னோர்' என்பது இங்கே மெய்யறிவும் நல்லொழுக்கமு முடைய முன்னோரை உணர்த்திநின்றது.

[மேற்கூறியவாறு கைகேயி கூறி "அநியாயமும் அக்கிரமமுமான காரியங்களைச் சொல்லிய உனது நாக்கை அறுத்தெறிதல்வேண்டும். நீ பழமையான தோழியாதலால் அது செய்யாது பொறுத்தேன். என் எதிரே நில்லாதே. போ என்றாள். அவ்வாறு கடிந்து கூறியும், மந்தரை, சிறிதும் அஞ்சாமல், சிகிச்சைசெய்தும் தீராத விடம்போல நீங்காமல் "எனக்குத் தஞ்சமாகிய உனக்கு உறுதிப்பொருளை உணர்த்துதலை ஒழியேன்" என்று காலில் வீழ்ந்து கூறுவாள்.]

[தொடரும்]

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

அநுதாபக்குறிப்பு.

இராமநாதபுரம்ஸமஸ்தானம் மாட்சிமைதங்கிய (காலம்சென்ற) எம். பாஸ்கரஸேதுபதி மஹாராஜா அவர்களின் அருமைமருகரும், மேலாய்க்குடிஜமீந்தார் ஸ்ரீமத். மங்களசாமித்தேவரவர்கள் குமாரரும், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவருமான ஸ்ரீமத். வேலுசாமித்தேவரவர்கள் சிலகாலமாகச் சரீராரோக்கியமில்லாதிருந்து இந்த ரக்தாக்ஷிவருஷம் மாசிமாதம் உ௰கூஉ வியாழக்கிழமையன்று தேகவியோகமடைந்தார்களென்று தெரிந்து வருந்துகிறோம். இவர்கள் தமிழாராய்ச்சியில் விருப்பமும், சாந்தகுணமும், தக்காரிடத்து நன்கு மதிப்பும், ஆஸ்திகபுத்தியும், அடுத்தோரிடத்தில் ஆதரவுமுடையவர்களாகி யாவராலும் நன்குமதிக்கப்பெற்றிருந்தார்கள். இவர்களது அகாலமரணத்தால் நேர்ந்த பிரிவாற்றாது வருந்தும் அந்தப்புரத்தார் முதலான பந்துக்களுக்கெல்லாம் நம் மனப்பூர்வமான அநுதாபத்தைத் தெரிவிக்கிறோம்.

மதிப்புரை.

தஞ்சை சரபோஜிமஹாராஜா ஸரஸ்வதிமால் லைபிரேரியின் 1923, 1924ம்-வருஷத்து அறிக்கைப்பத்திரம் (ஆறுவது புத்தகம்) கிடைக்கப் பெற்றது. இது அந்த புத்தகசாலையின் நிர்வாகஸபையின் கௌரவ காரியதர்சியான மகா-ள-ள-ஸ்ரீ டி. சாம்பமூர்த்திராவ் அவர்களால் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் அப்புத்தகசாலையின் பெருமையும் அபிவிர்த்தியும் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகசாலையில் ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு, மஹாராஷ்ட்ரம் இங்கிலீஷ் முதலிய பாஷைகளிலும் புத்தகங்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கெல்லாம் விவரமுள்ள காட்லாக் ஒன்றெழுதி அச்சிடவேண்டிய முயற்சி நடந்துவருவதாகத் தெரிகிறது. சென்ற ஆண்டில் வேலை தொடங்கி நடந்துவருவதாக அறிக்கைப்பத்திரத்திற் சொல்லப்பட்ட தமிழ்ப்புத்தகங்களின் காட்லாக் ஒன்று, ராவ்பகதூர், கே. எஸ். ஸ்ரீநிவாஸபிள்ளையவர்களின் மேற்பார்வையில் திருவையாற்று ஸம்ஸ்க்ருதகாலேஜ்பண்டிதர் ஸ்ரீமத். L. உலகநாதபிள்ளையவர்களால் நன்றாக எழுதப்பட்டு அச்சாய் வெளிவந்திருக்கிறது. இவ்வாறே ஸம்ஸ்க்ருத முதலிய பாஷாபுஸ்தகங்களுக்கும் ஒரு காட்லாக் எழுதி அச்சிடவேண்டியது மிகவும் அவசியமானகாரியமாகும். அதற்கு வேண்டிய பொருளுதவிசெய்யும்படி சென்னை ராஜாங்கத்தாரை வேண்டிக்கொண்டிருப்பதும், திருவாங்கூர் மஹாராஜா அவர்களால் அந்த ஸமஸ்தானத்திற் பிரசுரிக்கப்பட்டுவரும் புத்தகங்களில் இதுவரை வெளிவந்த 67 புத்தகங்கள் நன்கொடைபெற்றிருப்பதும், இன்னும் பதிக்கப்படும் புத்தகங்களிலும் பிரதி அளித்துவரும்படி மஹாராஜா அவர்களிடம் உத்தரவுபெற்றிருப்பதும், மற்றும் பலரும் தாம் பதித்த புத்தகப்பிரதிகளை உபரிகரிக்கச்செய்திருப்பதும் கௌரவகாரியதர்சி ஸ்ரீமத். சாம்பமூர்த்திராவ் அவர்கள் செய்துவரும் நன்முயற்சியைக் காட்டுகின்றன. இன்னும் ராவ்அவர்கள் இப்புத்தகசாலையின் அபிவிர்த்திக்குரிய காரியங்களை இடையறாதுசெய்துவருமாறு இறைவன் திருவருள்புரிவாராக.

உ

இராமநாதபுரம் ஸமஸ்தானம் மாட்சிமைதங்கிய இராஜராஜேசுவர ஸேதுபதி
மஹாராஜா அவர்களின் அருமை மைத்துனரும்
மேலாய்க்குடி ஜமீன்தாருமாகிய

ஸ்ரீமாந்: வேலுசாமித் தேவரவர்கள்

தேகவியோகமடைந்ததற்காற்றுது
சிவகங்கைக் தாலூகா போர்டு மெம்பரும்,
மதுரைத்தமிழ்ச்சங்க வித்வான்களுள் ஒருவருமாகிய
சோதுகுடி **M. K. M.** அப்துல்காதிறுராவுத்தர் பாடிய

இரங்கற்பாக்கள்.

வெண்பா.

மன்னு மிரத்தாட்சி மாசியிரு பானொன்பான்
துன்னபர பக்கத் துதியையத்தம் — பொன்னவனாள்
பூமிபுகழ் தென்முகவைப் பூமான் றுரைவேலு
சாமியடைந் தான்பரமன் றாள்.

திக்கனைத்துந் துதிவேலன் பத்திமிகப் பூண்டவன்றன் றிருப்பேர் வாய்ந்து
மிக்கபுகழ் படைத்திருந்த துரைவேலு சாமியுயர் விபுதர் நாடு
புக்கமொழி செவியுறலுந் துடிதுடித்துப் பதைத்தெமனம் புழுங்கிற் றாயின்
ஒக்கலுரி மையர்நேயர் மனம்படும்பா டினைத்தெனயா ருரைப்பா ரம்மா. (1)

எவ்வுலகுங் காக்குமொரு வரதனெனும் வேலனிடத் திருக்கு மன்பும்
அவ்வியமில் லாமனமு மருட்கொடையும் வாய்மையுமிக் கார்ந்த தூய
திவ்வியநற் குணவேலு சாமியெனும் வள்ளால்விண் சென்றா யென்னும்
எவ்வமொழிப் பறைகேட்டுக் கேகயமா யினமினியா மென்செய் வோமே. (2)

கல்வியினாற் கருணையினாற் கற்றவர்க்குக் கற்பகமாய்க் கவினு மாண்பாற்
பல்விதமாப் பலவறமும் புரிதலினாற் றெய்வபத்தி படைத்த பண்பாற்
சொல்விதங்கொ ளின்னுரையா லுயர்வேலு சாமியெனுஞ் சுகுணன் றன்னைக்
கொல்வதனா லென்பெற்றாய் நமனேநீ மிகவுமறக் கொடியை யன்றோ. (3)

இந்நாட்டுத் தேவர்சபைக் கதிபதியா யிருந்துதமி ழியனூல் வல்லார்
மூன்னாட்டு மோர்சங்க றானமேலாய்க் குடியில்சிறீஇ முதன்மை பூண்டே
யெந்நாட்டும் புகழ்படைத்தாய் விண்ணாட்டுத் தேவர்சபைக் கிறைமை பூண்பான்
பொன்னாட்டிற் புகுந்தனையோ எம்வேலு சாமிதுரை புகலுவாயே. (4)

தருந்தரும துரையான ராஜரா ஜேச்வரற்குத் தங்கை யாநல்
அருந்ததிநேர் மனைகவல வருமந்த தமர்களழ வன்ப ரேங்கப்
பொருந்தினைவிண் டேவர்குழா மிதுதகுமோ விதுமுறையோ பொருவி லின்பந்
திருந்தியசீர் முகவைநகர்த் தேவர்குல சிகாமணியே செப்பு வாயே. (5)

முற்றிய சிந்தைய னாகி முன்னம்
புதல்வருந் தானு முதுகிட் டுடைந்த
கூடலே களமெனக் குறித்தக் கூடலில்
வாரா தஞ்சினர் மன்ன ரல்லர்
போர்ப்பெ ரும்பழிப் புரட்ட ராகவென்
றியாவரு மறிய வெழுதிய பதிக
மேவரு மோலை விடையொடுங் கொடுத்தவ்
விரட்ட பாடிப் புரட்டர்க ளனைவருங்
கங்கா கேத்தனை யேவ வங்கவன்
வந்தடி வணங்கி வாசக முணர்த்தலும்
சிந்தையு முகமுந் திருப்புய மிரண்டு
மேந்தெழி லுகவையொ டிருமடங்கு பொலிய
போந்தப் போர்க்களம் புகுந்து காந்தையில்
வல்லவர் கோனை வரவு காணாது
சொல்லிய நாளின் மேலுமோர் திங்கள்
பார்த்தி ருந்த பின்னைப் போர்த்தவன்
கால்கெட வோடி மேல்கட லொளித்தலுந்
தேவ நாதனுஞ் சித்தியுங் கேசியு
மூவருந் தனித்தனி முதுகிடப் பாவரு
மிரட்ட பாடி யேழரை யிலக்கமு
முரட்டொழி லடக்கி முழுங்கெரி யூட்டி
வெங்கதிப் புலியேறு வியந்துவிளை யாடத்
துங்கபத் திரைக்கரைச் செயபத் திரத்தூண்
நானிலம் பரச நாட்டி மேனாள்
வந்த புரட்டனை வல்லவ னாக்கிச்
சுந்தர கண்டிகை கட்டிப்
புரசை யானைப் புழைக்கையிற் பிழைத்திவ்
வுலக மறிய வோடிய பரிசொரு
பலகையிற் பழுதற வெழுதிய பின்னை
சார்த்தின வுறையுஞ் சளுக்கி பதம்பெற்ற
பூத்தின? மார்வொடும் பூட்டிப் போர்த்தூங்
தான்கைக் கொண்ட வேங்கைநன் னாடு
மீட்டுக் கொண்டலான் மீள்கிலங் கேட்டுநீ
வல்ல னாகில் வந்துகாக் கென்று
சொல்லி யெடுத்தவத் தானை விசைய
வாடையொ டடுத்தபே ராற்றிற் றடுத்த

சனநா தனையுந் தண்டநா யகனும்
இனமார் கடக்களிற் றிராசமய் யனையு
முதப்பா சனையு முதலாக வுடைய
அப்பெருஞ் சேனையை யடவியிற் பாய்ச்சிக்
கோதா விரியிற் றன்போ தகநீ
ருண்ணக் கலிங்க முங்கடந் தப்பாற்
சக்கரக் கோட்டத் தப்புறத் தளவு
மேவருந் தானைத் தாவடி செலுத்தி
வேங்கைநாடு மீட்டுக் கொண்டுதன் பூங்கழற்
கடைக்கலம் புகுந்த படைக்கலத் தடக்கை
விசையா தித்தற் கருளி விசைகொடு
மீண்டுவிட் டருளி யிகலிடை பூண்டசயத்
திருவொடுங் கங்கா புரிபுகுந் தருளி
அங்கே ராசாதி ராச ராச
னனைத்தராதிபரா................
படியில் மன்னவ ரடிதொழு தேத்த
வின்மணிப் பீடத் திருந்து வேங்கைநன்
னாட்டினிற்கொண்ட
இருநிதிப் பிறக்கம் வரிசையிற் காட்டி
ஆழியு நிகளமு மகற்றி யாங்கவர்
வாழிய விரத மாற்றிப் [1]பூழிமஞ்
செய்துவரம் பாகச் செங்கோல் செலுத்தி
மேதினி விளக்கி மீதுயர் வீரத்
தனிக்கொடி தியாகக் கொடியொடு
மேற்பவர் வருகென்று நிற்பப் போர்த்தொழில்
உரிமையி லெய்தி யரசுவீற் றிருந்து
மேவரு மனுநெறி விளக்கிய கோவிராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீவீரராசேந்திர தேவர்க்கு யாண்டு:—

அதிராசேந்திரதேவன்.

787. திங்களேர் மலர்ந்து வெண்குடை மண்டில
மன்னுயிர் தோறு மின்னருள் சுரந்து
நிறைநிழல் பரப்பி நிற்ப முறையிற்
செங்கோல் திசைதொறுஞ் செல்லத் தங்கள்
குலமுதற் பரிதியின் வலிசேர் புவனிக்கும்

[1] சூழிமஞ். (787) சாஸனம்.

ஒற்றை யாழி யுலாவ நற்றவத்
திருமலர்ச் செல்வியு மிருநிலப் பாவையும்
கீர்த்தியங் கிள்ளையும் போர்த்தனிப் பூவையும்
வதுவையிற் புணர்ந்து பொதுமை துறந்து
உரிமைத் தேவிய ராக மரபினிற்
சுடர்மணி மகுடஞ் சூடி நெடுநில
மன்னவர் முறைமுறை தன்னடி வணங்க
வீரமுந் தியாகமு மாரமெனப் புனைந்து
வீரசிம் மாசனத்து உலகமுழுதுடையாரொடும் வீற்றிருந்தருளிய
மாப்புகழ் மனுவுடன் வளர்த்த கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீ அதிராசேந்திர தேவர்க்கு யாண்டு:—

(கூடற்சங்கமத்துப்போர்.)

788. மின்னார் வடிவேற்கை வீரரா சேந்திரன்றன்
பொன்னார் பதயுகளம் போற்றுது—கன்னடர்
புன்கூ டலசங்க மத்திறுடும் போருடைந்தார்
மன்கூ டலசங்க மத்து.

789. விண்கூ டலசங்க மத்துடைந்த வேல்வடுகர்
எண்கூ டலறு மிருங்கானிற்—கண்கூடப்
பண்ணினான் றன்னுடைய பாதம் பணியாமைக்
கெண்ணினார் சேரு மிடம்.

790. வீரத்தால் விண்ணுதல் மெய்த்தவத்தால் வீடாதல்
ஆரத்தா லாள்வதெவர் தாடேற்ற (?)—சீரொத்த
மின்னார் படைத்தடக்கை வீரரா சேந்திரனுக்
கொன்னாராய் வாழ்வ துறின்.

(கொப்பத்துப்போர்.)

791. தற்றுற் றன்றுவெம் போர்செய்த
விற்கைப் பன்மன்முன் போடவோர்
தத்திற் றுன்றுவன் பாய்பரி
யுய்த்துத் தன்மெய்கொண் டோடிய
வெற்றிச் செம்பியன் பார்புகழ்
கொற்கைக் கண்டன்வன் பாரதம்
வெற்புக் கொண்டதிண் போர்புரி
கொப்பத் தன்றெதிர்ந் தோர்பெறு

(788–790) வீரசோ. அலங். 39 மேற். (791) டை. யாப். 34. மேற்.

கொற்றத் தொங்கல்சிங் காதன
மொற்றைச் சங்குவெண் சாமரை
குத்துப் பந்தர்முன் பாவிய
முத்துப் பந்திமுன் றூன்மகிழ்
ஒற்றைப் பெண்டிர்பண் டாரமொ
டற்றைத் தன்பெருஞ் சேனையும்
இட்டிட் டன்றுடைந் தான்வசை
பட்டுக் கண்டவங் காரனே.

(இராசேந்திர சிங்கன்.)

792. எனவே தனமென் றிராசேந்த்ர சிங்கனொ டின்றணைந்த
கனவே யுடையன் களிப்புக்கண் டாற்கட லேழுமமைந்
தனவே யெனவவன் றூனுதித் தன்றே தொடங்கியென்று
நனவே புணர்திரு வின்களிக் கேதுகொ னல்லனவே.

(இராசகண்டரவன்.)

793. குடைநின் றதுசெம்மை கோலொடு சென்றது கோமனுவி
னடைநின் றதுகலி ஞாலங் கடந்தது நன்மையன்றி
யிடைநின்ற தொன்றுண் டியாதெனி னிராசகண் டரவநின்
றொடைநின்ற தார்புனை வார்மட வார்படுந் துன்புறவே.

(அநுபமன்).

794. மிகைசேர்ந்த நாகமும் வெண்மதியுந் தம்மிற்
பகைதீர்ந்த [1]மால்சடையோன் காப்ப—முகைமலரக்
கோழி யநுபமன் கோரம் புலிவாழி
வாழிய மண்டலத்து வான்.

795. மண்ணாடு காத்தற்கு நீயுறங்காய் வானவர்கோன்
விண்ணாடு காத்தற்கு மேலுறங்கான்—நண்ணாதா
ரானவரைக் கொன்று யநுபமா நீயவனுந்
தானவரைக் கொன்றான் றடிந்து.

796. மேரு நெடுவரை மீது பொருபுலி
சேர வெழுதிய சோழன்
ஆர மலரணி யாளி யனுபமன்
வீர னடுகணை யானே.

---

(792) வீரசோ. யாப். 22. மேற். (793) ஷை. அலங். 22. மேற். (794) ஷை. அலங். 13, 32 மேற். [1]பாய்சடையோன். (795) ஷை. 15 மேற். (796) ஷை. யாப். 16 மேற்.

(மானதன்).

797. இணங்கு மாத ரேசவே யிரங்கி மோத வேலைமா
னணங்கு லாவு வாளியா னணிந்த சாப மாயமால்
உணங்கி மேனி வாடுமோ லுறந்தை யாளு மானதா
வணங்கி ஞவி காவனீ யணிந்த வார மாகுலம்.

முதற்குலோத்துங்கன்.

(முதல் மெய்க்கீர்த்தி)

798. திருமன்னி விளங்கு மிருகுவ டனையதன்
தோளும் வாளுந் துணையெனக் கேளலர்
வஞ்சனை கடந்து வயிரா கரத்துக்
குஞ்சரக் குழாம்பல வாரி யெஞ்சலில்
சக்கரக் கோட்டத்துத் தாரா வரசனைத்
திக்கு நிகழத் திறைகொண் டருளி
அருக்க னுதயத் தாசையி லிருக்குங்
கமல மனைய நிலமக டன்னை
முந்நீர்க் குளித்த வந்நா ளாதிக்
கேழ லாகி யெடுத்த திருமால்
யாதுஞ் சலியா வகையினி தெடுத்துத்
தன்குடை நிழற்கீ ழின்புற விருத்தித்
திகிரியும் புலியுந் திசைதொறும் நடாத்திப்
புகழுந் தருமமும் புவிதொறு நிறுத்தி
வீரமுந் தியாகமும் மானமுங் கருணையும்
உரிமைச் சுற்ற மாகப் பிரியாத்
தலநிகழ் சயமுந் தானும்வீற் றிருந்து
குலமணி மகுட முறைமையிற் சூடித்
தன்கழல் தராதிபர் சூடச் செங்கோல்
நாவலம் புவிதொறும் நடாத்திய கோவிராசகேசரிவன்மரான
உடையார் ஸ்ரீராசேந்திர சோழதேவர்க்கு யாண்டு :—

(இரண்டாவது மெய்க்கீர்த்தி.)

799. புகழ்சூழ்ந்த புணரி யகழ்சூழ்ந்த புவியிற்
பொன்னேமி யளவுந் தன்னேமி நடப்ப
விளங்குசய மகளை யிளங்கோப் பருவத்துச்
சக்கரக் கோட்டத்து விக்ரமத் தொழிலாற்

(797) வீரசோ. யாப். 33. மேற். (798) சாஸனம். (799) S.I.I. iv. 135–136.

புதுமணம் புணர்ந்து மதவரை யீட்டம்
வயிரா கரத்து வாரி யயிர்முனைக்
கொந்தள வரசர் தந்தள மிரிய
வாளுறை கழித்துத் தோள்வலி காட்டிப்
போர்ப்பரி நடாத்திக் கீர்த்தியை நிறுத்தி
வடதிசை வாகை சூடித் தென்றிசை
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்
பொன்னி யாடை நன்னிலப் பாவையின்
தனிமையுந் தவிரப் புனிதத் திருமணி
மகுட முரிமையிற் சூடித்
தன்னடி யிரண்டுந் தடமுடி யாகத்
தொன்னில வேந்தர் சூட முன்னை
மனுவாறு பெருகக் கலியாறு வறப்பச்
செங்கோல் திசைதொறுஞ் செல்ல வெண்குடை
இருநில வளாக மெங்கணுந் தனாது
திருநிழல் வெண்ணிலாத் திகழ வொருதனி
மேருவிற் புலிவிளை யாட வார்கடற்
றீபாந் தரத்துப் பூபாலர் திறைவிடு
கலஞ்சொரி களிறுமுறை நிற்ப விலங்கிய
தென்னவன் கருந்தலை பருந்தலைத் திடத்தன்
பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப விந்நாட்
பிற்குலப் பிறைபோல் நிற்பிழை யென்னுஞ்
சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை
வில்லது கோடா வேள்குலத் தரசர்
அளத்தியி லிட்ட களிற்றின நீட்டமும்
பட்டவெம் பரியும் விட்டதன் மானமும்
கூறின வீரமும் கிடப்ப வேறின
மலைகளு முதுகு நெளிப்ப விழிந்த
நதிகளுஞ் சுழன் றுடைந் தோட விழுந்த
கடல்களுந் தலைவிரித் தலமரக் குடதிசைத்
தந்நா ளுகந்து தானும் தானையும்
பன்னா ளிட்ட பலபல முதுகும்
பயத்தெதிர் மாறிய சயப்பெருந் திருவும்
பழியிகந்து கொடுத்த புகழின் செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது கொடுத்த வெங்கரி நிரையும்

சங்கமண் டலமும் சிங்கண மென்னும்
பாணி யிரண்டு மொருவிசைக் கைக்கொண்
டண்டிய புகழொடு பாண்டிமண் டலங்
கொள்ளத் திருவுளத் தடைத்து வெள்ளம்
வருபரித் தாங்கமும் பொருபரிக் கலங்களும்
தந்திர வாரியு முடைத்தாய் வந்து
வடகடல் தென்கடல் படர்வது போலத்
தன்பெருஞ் சேனையை யேவிப் பஞ்சவர்
ஐவரும் பொருத போர்க்களத் தஞ்சி
வெரிநளித் தோடி யரணைப் புக்க
காடறத் துடைத்து நாடடிப் படுத்து
மற்றவர் தம்மை வனசரர் திரியும்
பொற்றை வெஞ்சுர மேற்றிக் கொற்ற
விசயத் தம்பந் திசைதொறு நிறுத்தி
முத்தின் சலாபமு முத்தமிழ்ப் பொதியிலு
மத்தவெங் கரிபடு மய்யச் சையமும்
கன்னியுங் கைக்கொண் டருளித் தென்னாட்
டெல்லை காட்டிக் கடன்மலை நாட்டுள
சாவே றெல்லாந் தனிவிசும் பேற
மாவே றியதன் வருதினித் தலைவரைக்
குறுகலர் குலையக் கோட்டா றுட்பட
நெறிதொறு நிலைகளிட் டருளித் திறல்கொள்
வீரசிம் மாசனந் திரியவிட் டருளி
வடதிசை, வேங்கை மண்டலங் கடந்து தாங்கலர்
கலிங்க மேழுங் கனலெரி பரப்ப
விலங்கல் போல விலங்கிய வேந்தர்
விட்டவெங் களிற்றொடு பட்டுமுன் புரளப்
பொருகோ பத்தொடு போர்முக மதிர
வருகோ மட்டையன் மாதவ னெதிர்பட
எங்க ராய னிகலவ ரேச்சணன்
மாப்பிறளா(?) மதகரி யிராசணன்
தண்டுபதி யாகிய தலைச்சே னாபதி
மண்டலிக தாமய னெண்பர்த்(?) திசைமுகன்
போத்தயன் கேத்தணன் செருச்சே னாபதி
என்றிவ ரனைவரும்
வெற்றவே ழத்தொடு பட்டு மற்றவர்

கருந்தலை யொடுவெண் ணிணங்கழு கோடு
பருந்தலைத் தெங்கணும் பரப்ப வுயர்த்துத
தருங்கட லடையத் தராதலந் திறந்து
கலிங்க மேழுங் கைக்கொண் டலங்கல்
ஆரமுந் திருப்புயத் தலங்கலும் போல
வீரமுந் தியாகமும் விளங்கப் பார்தொழச்
சிவணிடத் துமையெனத் தியாக வல்லி
உலக முடையா ளிருப்ப வவளுடன்
கங்கைவீற் றிருந்தென மங்கையர் திலதம்
ஏழிசை வல்லபி யேழுலகு முடையாள்
வாழி மலர்ந்தினி திருப்ப ஆழியுந்
திருமா லாகத்துப் பிரியா தென்றும்
திருமக ளிருந்தென வீரசிம் மாசனத்து
வீற்றிருந் தருளின கோவிராசகேசரி வன்மரான
திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு—

(மூன்றுமெய்க்கீர்த்தி.)

800. புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப
நிலமக ணிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர
ஏனை மன்னவ ரிரியலுற் றிழிதர
விக்கலன் சிங்கணன் மேல்கடற் பாயத்
திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி
விசயாபி டேகம்பண்ணி வீரசிம் மாசனத்துப்
புவனமுழு துடையாளொடும் வீற்றிருந்தருளிய
கோவிராசகேசரி வன்மரான சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவர்க்கு யாண்டு.—

(நான்காமெய்க்கீர்த்தி.)

801. பூமன்னு பாவை காமுற்று முயங்க
இருநிலக் கிழத்தியைத் திருமணம் புணர்ந்து
கலையின் செல்வி தலைமை யோங்கப்
போர்மகள் காப்பச் சீர்மகள் போற்ற

---

(801) சாஸனம்; இஃது இரண்டாங்குலோத்துங்கனுக்குரியதாகவும் கொள்ளற்குரியது.

மரகதப் புரவி யிரவிகுலம் விளங்கப்
பாற்கடற் றெய்வப் பள்ளி நீங்கி
நாற்கடல் வட்ட நாடொறுந் தாங்கி
எண்டிசை யானை தண்டுவிடை நிற்பக்
காவற் றேவர்க ளேவல் கேட்பக்
கலிப்பகை யோட்டிப் புலிக்கொடி யெடுத்துத்
தென்னவர் கேரளர் சிங்களர் தெலுங்கர்
கன்னட ரிலாடர் கலிங்கர் முதலாகக்
கொற்றவர் வந்து குடிமை செய்ய
ஒற்றை வெண்குடை யுலகுதனி கவிப்ப
ஊழிபல கோடி யாழி நடாத்திச்
செம்பொன் வீர சிம்மா சனத்துத்
திரிபுவன முடையாளொடும் வீற்றிருந் தருளிய
கோவிராசகேசரி வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு—

குந்தவை தில்லைக்கோயில் பொன்வேய்ந்தது.

802. நானிலத்தை முழுதாண்ட சயதரற்கு
நாற்பத்து நாலா மாண்டில்
மீனநிகழ் நாயிற்று வெள்ளிபெற்ற
வுரோகிணிநா ளிடபப் போதாற்
றேனிலவு பொழிற்றில்லை நாயகர்தங்
கோயிலெலாஞ் செம்பொன் வேய்ந்தாள்
எனவரும் தொழுதேத்து மிராசராசன்
குந்தவைபூ விந்தை யாளே.

(கலிங்கத்துப்போர்.)

803. ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வடநாடர்
அருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது.

804. கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டஞ்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ்
சிவந்தன செந்தீத் தெற.

---

(802) சோழவமிச. பக். 27. (803) தண்டி. 106, மேற். (804) வீர சோ, அலங். 31; தண்டி. 79, மேற்.

805. காடத்தான் மாரியுங் கண்ணால் வெயிலும்
நிரைவயிரக் கோட்டா னிலவுஞ்—சொரியுமால்
நீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்.

806. தடங்குலவு நாண்மாலைத் தாமத்தன் கையில்
விடங்குலவு வெள்வாள் விதிர்ப்ப—நடுங்கியதே
கோண்மேவு பாம்பின் கொடுமுடிய தல்லவோ
வாண்மே வியகலிங்கர் மண்.

807. வாட்டாறு கொங்கம் வடகலிங்கந் தென்மதுரை
கோட்டாறுங் கொண்ட குலதீபன்—எட்டில்
எழுத்திருபத் தெட்டிட்டா னென்றரசர் கேட்டுக்
கழுத்திருபத் தெட்டிட்டார் காண்.

(கருநடருடன்போர்.)

808. உடைதலையு மூளையு மூன்றடியு மென்பும்
குடருங் கொழுங்குருதி யீர்ப்பு—மிடைபேய்
பெருநடஞ்சேர் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சீறுங் களம்.

809. மலையி னலைகடலில் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தாற்—றலைமைசேர்
அம்மாதர் புல்லு மபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்.

(அபயன் பகைவர்நிலை.)

810. மழையார் கொடைத்தடக்கை வாளபய னெங்கோன்
விழையார் விழையார்மெல் லாடை—குழையார்
தழையா முணவுங் கனியா மினமு
முழையா முழையா முறை.

(விக்கிரமசோழதேவன்.)

811. பூமாலை மிடைந்து பொன்மாலை திகழப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திருநில மடந்தையொடு சயமக ளிருப்பக்
கனவரை மார்வந் தனதெனப் பெற்றுத்
திருமக ளொருதனி யிருப்பக் கலைமகள்

(805) தண்டி. 59. மேற். (806) கலிங்கத்துப்பரணியிறுதி (கையெழுத்துப்பிரதி). (807) தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி. (808) தண்டி. 70. மேற். (809) ஷை. 59. (810) ஷை. 93. மேற். (811) சாஸனம்.

சொற்றிறம் புணர்ந்த கற்பின ளாகி
விருப்பொடு நாவகத் திருப்பத் திசைதொறுந்
திகிரியொடு செங்கோல் நடப்ப வகில
புவனமுங் கவிப்பதோர் புதுமதி போல
வெண்குடை மீமிசை நிழற்றக் கருங்கலி
யொளித்துவன் பிலத்திடைக் கிடப்பக் குளத்திடைத்
தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவுங்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும்
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளித் தென்றிசைத்
தருமமுந் தவமுந் தானமுந் தழைப்ப
வேதமும் மெய்ம்மையு மாதியுகம் போலத்
தலைத்தலை சிறப்பவந் தருளி வெலற்கரும்
போர்ப்புலி யானை பார்த்திவர் சூட
நிறைமணி மகுட முறைமையிற் சூடி
மன்னுயிர்க் கெல்லா மின்னுயிர்த் தாய்போற்
றண்ணளி[1] பரப்பித் தனித்தனி பார்த்து
மண்முழுதுங் களிப்ப மனுநெறி வளர்த்துத்தன்
கோயிற் கொற்ற வாயிற் புறத்து
மணிநா வொடுங்க முரசுகண் முழங்க
விசயமும் புகழும் மேன்மே லோங்க
வாழி வாழியிம் மாநிலங் காக்கத்
திருமணிப் பொற்றோட் டெழுதுபத் தாண்டு
வருமுறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையாற்
றன்குல நாயகன் தாண்டவம் பயிலுஞ்
செம்பொனம் பலஞ்சூழ் திருமா ளிகையும்
கோபுர வாசல் கூடசா லைகளும்
உலகு வலங்கொண் டொளிவிளங்கு நேமிக்
குலவரை யுதய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து
இருநிலந் தழைப்ப விமையவர் களிப்பப்
பெரிய திருநாட் பெரும்பெயர் விழாவெனும்

---

[1] தன்னொளி.

உயர்பூரட் டாதி யுத்திரட் டாதியில்
அம்பல நிறைந்த வற்புதக் கூத்தர்
இம்பர் வாழ வெழுந்தருளு வதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து
பருஉத்திரண் முத்தின் பயில்வடம் பரப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன்
திருவளர் பெயராற் செய்துசமைத் தருளிப்
பைம்பொற் குழித்த பரிகல முதலாச்
செம்பொற் கற்பகத் தொடுபரிச் சின்னமும்
அளவில் லாதன வொளிபெற வமைத்துப்
பத்தா மாண்டிற் சித்திரைத் திங்கள்
அத்தம் பெற்ற வாதிவா ரத்துத்
திருவளர் மதியின் திரயோதசிப் பக்கத்து
இன்ன பலவு மினிதுசமைத் தருளி
ஒருகுடை நிழற்கீழ்த் தலமுழுதுங் களிப்பச்
செழியர்வெஞ் சுரம்புகச் சேரலர் கடல்புக
அழிதரு சிங்கள ரஞ்சிநெஞ் சலமரக்
கங்கர் திறையிடக் கன்னடர் வெந்கிடக்
கொங்க ரொதுங்கக் கொங்கணர் சாயமற்
றெத்திசை மன்னருந் தத்தமக் கரணெனத்
திருமலர்ச் சேவடி யுரிமையி னிறைஞ்ச
அங்கவன் மகிழுங் கங்கையொப் பாகிய
தெரிவையர் திலதந் தியாக பதாகை
புரிகுழன் மடப்பிடி புனிதகுண வனிதை
திரிபுவன முழுதுடையா ளெனவுட னிருப்ப
ஊழி யங்நெடு மாலா கத்துப்
பிரியா தென்றுந் திருமக ளிருந்தென
மாதர் மடமயில் பூதலத் தருந்ததி
அரணியல் கற்பிற் றரணிமுழு துடையா
ளிவன்திரு மார்வத் தருளொடு மிருப்பச்
செம்பொன் வீர சிம்மா சனத்துத்
திரிபு வனமுழு துடையா ளோடும்
வீற்றிருந்தருளிய கோப்பர கேசரி வர்மரான
திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்குயாண்டு:-

இரண்டாவது மெய்க்கீர்த்தி.

812. பூமாது புணரப் புவிமாது வளர
நாமாது விளங்கச் சயமாது விரும்பத்
தன்னிரு பதமலர் மன்னவர் சூட
மன்னிய வுரிமையான் மணிமுடி சூடிச்
செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப
வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்பக்
கலிங்க மிரியக் கடமலை நடாத்தி
வலங்கொ ளாழி வரையாழி திரிய
இருசுட ரளவு மொருகுடை நிழற்ற
விசயாபிடேகம்பண்ணி வீரசிம்மாசனத்து
முக்கோக்கிழானடிகளோடும் வீற்றிருந்தருளிய
கோப்பரகேசரிவன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள்
ஸ்ரீவிக்கிரமசோழதேவர்க்குயாண்டு:—

"சரச்சுவதி தம்பலங்கொடுக்கக் கவிதையுண்டாகிய கூத்தமுதலியார் அரும்பைத்தொள்ளாயிரம் பாடும்போது, விக்கிரமசோழன் கேட்டு 'ஒருகவிதையை ஓட்டச்சொல்' என்று சொன்னபோது பாடியது."

813. நடித்தது நச்சர வுச்சியி [1]னுச்சி மதிலிலங்கை
இடித்தது வென்ற திருபது தோள்பதி னெண்பகலே
முடித்தது பாரதம் வீரப் புலிவைப்ப மூரிச்செண்டால்
அடித்தது பொற்கிரி விக்ரம சோழ வகளங்கனே.

கூத்தர் விக்கிரமசோழனுலாப்பாடியபோது 'இரண்டு கண்ணியை ஒருபாட்டாகப் பாடு' என்றபோது பாடியது.

814. கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ்
செய்ய கரிய திருமாலே—வையம்
அளந்தா யகளங்கா வாலிலைமேற் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளென் மான்.

815. விச்சா தரனேனு மந்தரத்து மேவானேல்
அச்சுத னேனுமம் மாயனலன்—நிச்ச
நிறைவான் கலையா னகளங்க னீதி
இறையா னனகனெங் கோ.

---

(813) தமிழ் நா. 117. [1]னுச்சி (தஞ்சைச் சரச்சுவதிமால்—பிரதி).
(814) ஷெ. 120. (815) தண்டி. 77 மேற்; வீரசோ. அலங். 30 மேற்.

816. தண்டாமரை தருநாண்மலர் மீதோதிம மீனத்
தரளத்திரள் பவளத்திர ளென்றேழையர் தங்கைக்
கொண்டாடிட முன்னைக்கிது பின்னைத்தரு செம்மைக்
குணநான்மடி யுளதாகிய குடகாவிரி நாடா
பண்டாலிலை யமளித்துயில் குழவிப்பரு வத்தே
பவ்வத்தொடு முலைகைச்சிறு பவளத்துவர் வாயால்
உண்டா யகளங்காநிக ளங்காய்கரி தொழுதாள்
உய்யத்திரு வுளமோவெது செய்யத்திரு வுளமோ.

817. செய்யோனக ளங்கன்வள வன்சோழ குலேசன்
சென்னிக்குல தீபன்னுயர் பொன்னித்திரு நாடன்
பொய்யோடொரு நாளும்முறை செய்யாமனு துங்கன்
போர்வல்லவன் மல்லைப்பொழில் பொங்குங்குரு கீரே
ஐயோவவ ரைப்போலொரு நிட்டூரரு முண்டோ
அஞ்சம்படு கைக்கேதுயர் நெஞ்சம்படு கைக்கே
வெய்யோன்விழு கைக்கேமுழு மதிவந்தெழு கைக்கே
விழிநீர்சொரி கைக்கேயெனை விட்டுப்பிரிந் தாரே.

818. வடவைக்கனலைப் பிழிந்துகொண்டு மற்றுமொருகால் வடித்தெடுத்து
வாடைத்துருத்தி வைத்தூதி மறுகக்காய்ச்சிக் குழம்புசெய்து
புடவிக்கயவர் தமைப்பாடிப் பரிசுபெறுமற் றிரும்பிவரும் [ளோ
புலவர்மனம்போற் சுடுநெருப்பைப் புழுகென்றிறைத்தாற் பொறுப்பா
அடவிக்கதலிப் பசுங்குருத்தை நச்சுக்குழலென் றஞ்சியஞ்சி
அஞ்சொற் கிளிகள் பஞ்சரம்விட் டகலாநிற்கு மகளங்கா
திடமுக்கடவா ரணமுகைத்த தேவே சோழசிங்கமே
திக்குவிசயஞ் செலுத்தியொரு செங்கோ னடாத்து மெங்கோவே.

இரண்டாவது குலோத்துங்கன்.

819. பூமன்னு பதுமம் பூத்தவே முலகுந்
தாமுன்செய் தவத்தாற் பரிதிவழித் தோன்றி
நெடுமா லிவனெனச் சுடர்முடி சூடி
இருநில மகளை யுரிமையிற் புணர்ந்து
திருமகள் பிணைமுலைச் செஞ்சாந் தணைந்து
பருமணி மார்வம் பனிவரை நிகர்ப்பச்
சயமகள் செழுந்தண் சந்தனச் சுவட்டாற்
புயமிரு கயிலைப் பொருப்பெனத் தோன்ற

(816–817) தஞ்சைச் சரச்சுவதிமால்-பிரதி. (818) தனிப்பா.

நாமகள் தானுமெங் கோமகன் செவ்வாய்ப்
பவளச் சேயொளி படைத்தன ளியானெனத்
தவள நன்னிறந் தனித்துடை யோரெனப்
புகழ்மகள் சிந்தை மகிழு நாளிலும்
ஒருகுடை நிலவும் பொருபடைத் திகிரி
வெயிலுங் கருங்கலி யிருளினைத் துரப்ப
நீடுபல் லூழி யேழ்கடற் புறத்தினுங்
கோடாச் செந்தனிக் கோலினி துலாவ
மீனமுஞ் சிலையுஞ் சிதைத்து வானுயர்
பொன்னெடு மேருவிற் புலிவீற் றிருப்ப
உம்ப ரியானை யோரெட் டினுக்குந்
தம்ப மென்னத் தனித்தனி திசைதொறும்
விசயத் தம்ப நிற்பப் பசிபகை
யானது தீங்கு நீங்க
மன்னுயிர் தழைப்ப மனுவாறு விளங்க
மாதவர் தவமு மங்கையர் கற்பும்
ஆதி யந்தண ராகுதிக் கனலு
மீதெழு கொண்டல் வீசுதண் புனலு
மேதினி வளருஞ் சாதி யொழுக்கமும்
நீதி யறமும் பிறழாது நிகழப்
பாவும் பழனப் பரப்பும் பணைக்கை
மாவு மல்லது வன்றளைப் படுதல்
கனவிலுங் காண்டற் கரிதென வருநதிப்
புடையினும் பல்வேறு புள்ளினு மல்லது
சிறையெனப் படுத லின்றி நிறைபெருஞ்
செல்வமோ டவனி வாழப் பல்லவர்
தெலுங்கர் மாளுவர் கலிங்கர் கோசலர்
கன்னடர் கடாரர் தென்னர் சேரலர்
சிங்கணர் கொங்கணர் சேதியர் திரிகர்த்தர்
வங்க ரங்கர் வத்தவர் மத்திரர்
கங்கர் சோனகர் கைகயர் சீனரென்
றறைகழல் வேந்தரு மெல்லா வரைசரும்
முறைமையில் வருந்தித் திறைகொணர்ந் திறைஞ்
அம்பொன் மலர்க்கொடி செம்பியன் கிழானடி
ஒருமருங் குடனமர்ந் திருப்ப வருள்புரி
சிமயப் பொற்கொடி யிமயப் பாவையுஞ்

சிவனும் போலப் புவனமுழு துடையா
ளிவன்திரு மணிமார்வத்
துலகமுழு துடையா ளெனவுட னிருப்பச்
செம்பொன் வீர சிம்மா சனத்துப்
புவனமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய
இராசகேசரி வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு:—

குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ்ப்பாட்டு.

820. பருவ வனங்குயில் பயில்வன பைந்தளிர்
கொந்தோ டுங்கோதப்
பருகு பெருங்களி யளிகுல பந்திகள்
கந்தா ரம்பாடக்
கருவி வியன்கதிர் கனிய மணந்தவர்
சந்தா பந்தீரக்
கழிகுரு கின்கிளை கலக மிடும்படி
போங்கோ தம்போகப்
புருவ நெடுஞ்சிலை புரள வளைந்தொரு
வெஞ்சா பங்கோலிப்
புதுமல ரம்புகள் பொழிய மணந்தவர்
தந்தே ரன்றேறித்
தெருவின் மதன்புரு விதலை யபங்குர
செங்கோ செங்கீரை
தினகர செம்பிய செயதர பஞ்சவ
செங்கோ செங்கீரை.

"உலாப்பாடியபோது போசிரியர்—நேமிநாதர் பட்டோலைபிடிக்க (கூத்தர்) பாடியது".

821. செங்கான்மட வன்னம்படர் தீயாமென வெருவிச்
சிறையிற்பெடை மறையக்கொடு திரியத்திரள் கமுகின்
[1]பைங்கான்மர கதமீது படர்ந்தேறி நறுந்தண்
பாளைக்கிடை பவளக்கொடி படர்காவிரி நாடா
தங்காதலி யருமைந்தரு மூடனுக வணங்கித்
தலைகாவெம துடல்காவெம துயிர்காவக ளங்கா
கொங்காமண துங்காவென மதுரேசர் வணங்கும்
கொல்யானை யபங்கா விவள் குழலோசை பொறாளே.

(820) தஞ்சைச் சரச்சுவதிமால்-பிரதி. (821) தமிழ்நா. 129. [1]பைங்காய்மர.